# கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

மாதம் இருமுறை

**5-8-1973**

30 காசு





பண்டைய நாகரீகத்தின்
மறுமலர்ச்சி
'காஜூரா' மற்றும் 'துப்பட்டா'க்களின் பரம்பரை நாகரீக கவர்ச்சிக்கு புதிய எழிலூட்டுகின்றன மபத்லாலின் 'மெஃப்ரின்' உடுப்புத் துணிகள். பாலியெஸ்டர் மற்றும் காட்டன் இழைகலந்த 'மெஃப்ரின்' பண்டைய கற்பனைகளுக்கு, நவநாகரீக ஒயிலோடு கூடிய வண்ணம், வடிவம் மற்றும் நெசவின் நேர்த்தியை இழைத்து, கிளர்ச்சியூட்டும் மறுமலர்ச்சியை அளிக்கிறது!
மபத்லால்
க்ரூப் அளிக்கும்
நேர்த்தியான துணிமணிகள்
மெஃப்ரின்
பாலியெஸ்டர் சேலைகள் மற்றும்
உடுப்புத் துணிகள்



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்


— பாரதியார்


# கோகுலம்

மலர் 2 : இதழ் 9
ஆகஸ்ட் 5, 1973
பிரமாதீச, ஆடி 21

சந்தா விவரம் :
ஒரு வருடம் ரு. 7–00
ஆறு மாதம் ரு. 3–50
நிர்வாகி, கோகுலம்
கல்கிப் பூங்கா, சென்னை-600031


## குல்லாக் குரங்கு 9




அட்டையில் :

வாரியார் வழங்கும் பெருமைக்கு உரிய பிள்ளையார் இவர்தானே ?

வண்ணப்படம் :
ஹரலிங்கம்



# பிள்ளையார் பெருமை

திருமுருக கிருபானந்தவாரியார்



**பி**ள்ளைகளின் உள்ளம் கள்ளம் இல்லாதது. பெரியவர்கள் ஆக ஆகத்தான் காமம், குரோதம், மோகம், சோகம் முதலிய தீக்குணங்கள் வண்டி வண்டியாக மண்டிக் குவிகின்றன.

ஞானிகளுக்கு உவமை கூற வருகின்றார் பட்டினத்து சுவாமிகள். ''பால் போன்றது'' ''பளிங்கு போன்றது'', ''இளநீர் போன்றது'', ''மாணிக்க மணி போன்றது'' என்ற உவமைகளையெல்லாம் கூறவில்லை.

குழந்தைகளின் உள்ளம் போன்றது என்றே கூறினார்.

''**சேய்போல் இருப்பார் கண்டீர் — உண்மை ஞானம் தெளிந்தவரே**'' என்பது பட்டினத்து சுவாமிகளின் திருவாக்கு.

ஞானிகளின் உள்ளத்துக்கு உவமை குழந்தைப் பிள்ளைகள் என்பதை இங்கு கவனிக்க வேண்டும்.

மாசில்லாத மனம் உடைய பிள்ளைகளுக்கெல்லாம் தெய்வம் பிள்ளையார்.

சிவபெருமானுக்கு நான்கு பிள்ளைகள். விநாயகர், வீரபத்திரர், பைரவர், வேலவர்.

சிவகுமாரர்களில் மூத்தவர் பிள்ளையார். அதனால் மூத்த பிள்ளையார் என்று பேர் பெற்றார்.

இவர் இளம் பிள்ளை. ஆனால் ஞானக் கொழுந்து. சகல ஆற்றலும் படைத்தவர். அதனால் பிள்ளை என்ற சொல் லுடன், பெருமையைக் குறிக்கின்ற ஆர் விகுதி சேர்ந்து பிள்ளையார் என்று பேர் பெற்றார்.

முதலி என்றால் முதலியார் என்றும், ரெட்டி என்றால் ''ரெட்டியார்'' என்றும் செட்டி என்றால் ''செட்டியார்'' என்றும் அழைப்பது மரபு. பிள்ளை என்று ஓர் இனம் உண்டு. வடிவேல் பிள்ளை. குமரப்பிள்ளை என்றுதான் கூறுவார்கள். வடிவேல் பிள்ளையார், குமரப் பிள்ளையார் என்று கூறுவது இல்லை. செட்டியார் வந்தார்; முதலியார் வந்தார் என்பது போல், பிள்ளையார் வந்தார் என்று சொல்லுவதில்லை. ''பிள்ளையார்'' என்றால் அச்சொல் விநாயகரை மட்டுமே குறிக்கும்.

நமது துன்பங்களுக்குக் காரணம் வினைதான். மற்ற மூர்த்திகள் வினைகளைத் தீர்க்கும். ஆனால் பிள்ளையார் வினைகளின் வேரையே களைந்தெறிவார். செடியை வெட்டினால், மீண்டும் வேரிலிருந்து செடி முளைக்கும். அது போல் வினையைக் களைந்தால் மீண்டும் வினை துளிர்க்கும். வேரை அகழ்ந்து எடுத்துவிட்டால் செடி முளைக்காது தானே. அது போல் வினைகளின் வேரை அகழ்ந்து எடுக்கும் தெய்வம் விநாயகர்.

**விநாயகனே வெவ்வினையின் வேரறுக்கவல்லான்**
**விநாயகனே வேட்கை தணிவிப்பான் -- விநாயகனே**
**விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்**
**கண்ணிற் பணிமின் கனிந்து**

என்று கவி தேவநாயனார் பாடுகின்றார்.

எல்லா எழுத்துக்களுக்கும், எல்லா ஓசைகளுக்கும், எல்லா வேதங்களுக்கும் மூலமாகவும் பிறப்பிடமாகவும், அவைகளின் முடிவிடமாகவும் விளங்குவது, ''ஓம்'' என்ற பிரணவம். அப்பிரணவ ரூபமாக விளங்குபவர் பிள்ளையார்.

பிள்ளையாரது பெருமை எழுத்துக்கும் சொல்லுக்கும் அடங்காதது. கற்பகத் தரு நினைத்தவை எல்லாம் தரவல்லது. பிள்ளையார் தன்னை வழிபட்டோர் நினைத்தவை எல்லாம் ஒருங்கே தரவல்லவர். அதனால் கற்பகப் பிள்ளையார் என்று ஆன்றோர் புகழ்வார்கள்.

பிரணவம் தோற்றம் இல்லாதது. பிள்ளையாரும் தோற்றம் இல்லாதவர். தோற்றம் உண்டானால் மறைவு உண்டு. முதலும் முடிவும் இல்லாத முழுமுதற் கடவுள் பிள்ளையார்.


''மூவரும் தேவரும் ஏவரும் போற்றும் தனிப் பெருந் தெய்வம் விநாயகக் கடவுள்.

விநாயகர் பிரணவத்திலிருந்து வெளிப்பட்டார்.

திருக் கயிலாய மலையில் ஏழு கோடி மந்திரங்கள் அடங்கிய மந்திர சித்திர மண்டபம் இருந்தது. அம்மந்திர சித்திர மண்டபத்துக்குப் பார்வதியும் பரமேசுவரனும் எழுந்தருளினார்கள். ஏழு கோடி மந்திரங்களுக்கு நடுவே சமஷ்டிப் பிரணவம், வியஷ்டிப் பிரணவம் என்ற இரு பிரணவங்கள் ஒளி செய்து கொண்டிருந்தன.

அந்த இரு பிரணவ மந்திரங்களைச் சிவமும் சக்தியும் திருக்கண்சாத்தி அருளினார்கள். அந்த இரு பிரணவங்களும் தன்னோடு ஒன்று மருவியது. அப்பிரணவங்களிலிருந்து பிரணவாகார யானை முகத்துடன் பிள்ளையார் அவதரித்தருளினார்.

பிள்ளையார் அம்மையப்பன் அடிமலர் களை வணங்கினார். செம்மை நிறமுள்ள வள்ளலாகிய பிள்ளையைச் சிவமூர்த்தியும் சிவகாம சுந்தரியும் எடுத்து உச்சி மோந்து உவந்து, ''உன்னை உள்ளன்போடு வணங்கி வழிபட்டோர்க்கு இடையூறுகளைக் களைந்து இன்னருள் செய்க'' என்று கூறிக் கணங்களுக்கெல்லாம் தலைவராக்கி வாழ்த்தியருளினார். ஆதலால், ''கணபதி'' ''கணேசர்'', ''கணாதிபன்'', ''கணநாதர்'' என்ற திருநாமங்களைப் பெற்றார். (தொடரும்)




# ஜவ்வரிசி என்றால் என்ன?

உங்கள் வீட்டில் பண்டிகை முதலிய விசேஷங்களில் இனிக்க இனிக்கப் பாயசம் வைத்துப் பரிமாறுவார்களே அந்த ஜவ்வரிசி எப்படிக் கிடைக்கிறது என்று தெரியுமா? 'அரிசி' என்றதும் நிலத்தில் விளைகிறதாக்கும் என்று நினைப்பீர்கள். அது தவறு. இந்த ஜவ்வரிசி கம்பு கேழ்வரகுபோல் விளைபொருள் அல்ல; செய்பொருள். கேரளத்தில் மரச்சீனி மரச்சீனி எனப்படும் குச்சிக் கிழங்கிலிருந்து கிடைக்கும் மாவிலிருந்து ஜவ்வரிசி தயாரிக்கிறார்கள். இந்தக் கிழங்கில் மூன்றில் ஒரு பாகம் மாவுச் சத்தும் இரண்டு பாகம் நீரும் இருக்கின்றன.



ஜவ்வரிசி தயாரிப்பது ஒரு குடிசைத் தொழில் போலத்தான். தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் இது அதிகமாகத் தயாராகிறது. டாபியோகா கிழங்குகளைக் கழுவித் தோல் நீக்கித் தண்ணீரில் சில நாள் ஊறப் போடுவார்கள். இப்படி ஊறப்போடாமல் அப்படியே கூழாக அரைப்பதும் உண்டு. அந்தக் கூழை வேக வைப்பார்கள். இந்த நிலையிலேயே இது ஓர் உணவுப் பொருள்தான் ஏழை மக்களுக்கு.

ஜவ்வரிசியாக எப்படி இது கடைக்கு வருகிறது என்று பார்ப்போம். கிழங்குகளைக் கழுவிக் காய வைத்து இடித்துப் பொடியாக்குவார்கள். இப்பொடியைச் சுத்தமான நீரில் ஊறவைப்பார்கள். மாவுப் பண்டம் அடியில் தங்க அசுத்தங்கள் தண்ணீரில் மேலாக மிதந்து கொண்டிருக்கும். இந்தத் தண்ணீரை வடித்துவிட்டுக் கீழே படிந்துள்ள மாவில் மறுபடியும் சுத்தமான நீரை ஊற்றிப் படிய வைப்பார்கள். இப்படி நாலைந்து தடவைகள் கலக்கிக் கலக்கிக் களைந்து படிய வைத்துச் சுத்தப்படுத்திய பின் அந்த மாவை உலோகத் தகடுகளில் ஒருசீராகப் பரத்தி அடுப்பில் வைத்து நிழல்போல் எரியவிட்டு வேக வைப்பார்கள். இப்படி வேக வைக்கும்போதே உலோகத் தட்டு சல்லடை சலிப்பது போல ஆடிக் கொண்டே இருக்கும். இதனால் மாவு அணுக்கள் ஒன்று சேர்ந்து சிறு சிறு உருண்டைகளாகி விடும். இதுவே ஜவ்வரிசி. மாவு பக்குவமாகச் சமைக்கப்பட்டதும் ஜவ்வரிசியாக மாறுகிறது. ஜவ்வரிசியை மேல் நாட்டவர் மிகவும் விரும்பி உண்கின்றனர். ஐரோப்பாவுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஜவ்வரிசி ஜாவா, பிரேஸில், மடகாஸ்கர் இங்கிருந்தெல்லாம் போகிறது. சூப்புகளை இறுக வைக்கவும் வேறு சில உணவு வகைகளுக்கும் ஜவ்வரிசியைப் பயன்படுத்துகிறார்கள். தென் அமெரிக்கரும் ஆப்பிரிக்கரும் கிழங்கு மாவைக் கூழாக்கியோ அல்லது வேக வைக்காத மாவுப் பொடியாகவோ பயன்படுத்துகிறார்கள்.



# வானத்தின் உயரம் என்ன?

ஓர் உயர்ந்த மலையின் உச்சியில் ஏறி நின்றால் வானத்தைத் தொட்டுவிட முடியும். நெடிதுயர்ந்த மலைகளின் உச்சிகள் வானத்தைத் தாங்கி நிற்கின்றன என்று ஆதி மனிதன் நினைத்தான். அவன் உயர்ந்த மலைகளின் உச்சிக்குப் போனதில்லை.

பின்னால் மனிதன் கொஞ்சம் நாகரிகம் அடைந்ததும், கவிழ்த்து வைக்கப்பட்ட மிகப் பிரும்மாண்டமானதோர் கிண்ணத்தைப் போன்றது வானம் என்று எண்ணினான்.

இன்று நமக்கெல்லாம் தெரியும், வானத்தை நம்மால் தொட முடியாதென்று. பூமியை வானம் தொடுவதுபோல் தோன்றும் இடத்தை நோக்கி நாம் பிரயாணம் செய்தோமானால் போகப் போக அதுவும் போய்க் கொண்டே இருக்கும். வெறும் காற்றும் வெற்று வெளியுமே நம் முன்னால் வளர்ந்து போய்க் கொண்டிருக்கும். வான வெளிக்கு நாம் அறிந்தவரை ஆரம்பமோ முடிவோ கிடையாது. நம் பூமியைச் சூழ்ந்து நாலா பக்கமும் வானம் பரந்துவிரிந்து கிடக்கிறது. நாம் நினைப்பதைவிட வானம் பிரும்மாண்டமானது. நம் பார்வைக்கும் கற்பனைக்கும் மிகப் பெரிதாகத் தோன்றும் பூமி, வானத்தின் மிக மிக நுண்ணியதொரு துகள்தான்.



# கழுத்தினுள் புகுந்து வரும் கயிறு

“சூ, மந்திரக்காளி! இதோ இந்தக் கயிற்றை என் கழுத்தில் மாட்டிக் கொள்ளுகிறேன். பார்த்துக்கொண்டே இருங்கள். இந்தக் கயிறு என் கழுத்தின் சதை வழியே நுழைந்து வரும். ஆனால் சொட்டு ரத்தம் சிந்தாது!'' என்று உங்கள் தோழர்கள் முன்னிலையில் சவால் விட்டு நில்லுங்கள். நண்பர்கள் பிரமிப்பார்கள். அவர்களைத் திகைப்பிலாழ்த்த இந்த மந்திர வேலையை நீங்கள் லாகவமாகச் செய்து காண்பிக்கலாம்.

எப்படி? ஐந்து அடி நீளமுள்ள ஒரு டுவைன் கயிற்றை எடுத்து அதன் இரு முனைகளையும் இணைத்து உறுதியாக முடியுங்கள். வளையம் போலாகும் அதை இரண்டாக மடித்து அப்படியே கழுத்தின் பின்பக்கமாக மாலைபோல் போட்டுக் கொள்ளுங்கள். அதன் மடித்த இரு முனைகளும் உங்கள் தோளின் இரு பக்கமும் தொங்குமில்லையா? அதன் லூப் முனைகளில் ஒவ்வொரு கையின் ஆள் காட்டி விரலையும் நுழைத்துப் பார்வையாளர்களிடம் இழுத்துக் காட்டுங்கள். (படம் 1) ''இப்போது இந்தக் கயிற்றை இழுக்கிறேன். இது என் கழுத்துச் சதையினுள் புகுந்து வெளி வரும். நான் தலையை அசைக்கவில்லை. கயிற்றின் முனைகளையும் விடவில்லை. கவனமாகப் பாருங்கள். கழுத்தினுள் கயிறு புகுந்து வெளி வரும் மாயத்தைப் பாருங்கள்!'' என்று அவர்களுடைய கவனத்தைக் கவருகிற வகையில் இப்படி ஏதாவது பேசிக் கொண்டே நான் சொல்லப் போகும் இந்தத் தந்திரத்தைச் செய்ய வேண்டும்.

## மத்திரமல்ல மாயமல்ல!

அவர்களிடம் பேசிக் கொண்டே உங்கள் கைகளை மெள்ளத் திருப்பிப் புறங்கையை அவர்கள் முன்னே இருக்கும்படி வைத்துக் கொண்டு வலது கையின் பாம்பு விரலை (நடு விரல்), இடது கை ஆள் காட்டி விரல் பற்றியுள்ள லூப்பினுள் நுழைத்து, அதே சமயம் வலது கை ஆள்காட்டி விரலில் மாட்டிக் கொண்டிருக்கும் (மறு) லூப் முனையை மெள்ள நழுவ விட்டுவிட வேண்டும். (படம் 2) இதற்கு ஏற்றபடி வலது ஆள் காட்டி விரலில் அந்த 'லூப்' முனையை விரல் நுனிக்குச் சாதுரியமாக முன்பே கொண்டு வந்து வைத்துக் கொள்ள வேண்டும். இப்படித் தன் லூப்பை நழுவவிட்டு இடது கையின் லூப்பை வலது கை, தன் பாம்பு விரலால் பற்றிக் கொண்டதும், ''சூ! மந்திரக்காளி! ஹ்ரீம்..... க்லீம்..... கயிறே! கயிறே! கழுத்தின் வழியாக நுழைந்து வா!'' என்று உரக்க மந்திரங்களைக் கூறிக் கொண்டே ஆர்ப்பாட்டமாக இரு கைகளையும் விரித்துக் கயிற்றை இழுக்கக் கழுத்தைச் சுற்றி இருந்த கயிறு விடுபட்டு இரு விரல் முனைகளிலும் நிற்கும். பார்ப்பவர்களுக்கு — அவர்கள் உங்கள் கழுத்தையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாலும் கயிறு கழுத்தினுள் புகுந்து வெளி வருவது போலவே இருக்கும். வியப்பினால் விழி பிதுங்க நிற்பார்கள். நீங்கள் செய்த தந்திரத்தை அவர்கள் பார்க்காதபடி இதை லாகவமாகவும் விரல்களை விரைவாக இழுக்கவும் பல முறை தனியே பழகிக் கொண்ட பிறகு பார்வையாளர்களிடம் செய்வது நல்லது. இந்தக் கயிற்று மந்திர வேலை உங்களுக்குக் கைவந்த கலையானால் உங்களை நண்பர்கள் பெரிய மந்திரவாதியாகவே மதிப்பார்கள். —வி.கே.



# அதிசய வீரர்கள்


ரொம்ப ரொம்ப வருஷங்களுக்கு முன்னாலே ஒரு ராஜா இருந்தார். அவரிடம் ஒரு சேனாபதி இருந்தான். அவன் பெரிய வீரன். பல போர்களிலே அந்த ராஜாவுக்கு வெற்றி தேடிக் கொடுத்தவன். இப்படி உண்மையாக உழைத்தும் அந்த ராஜா சேனாபதிக்கு நல்ல சம்பளம் கொடுக்கவில்லை. அந்த ராஜா பெரிய கஞ்சன். இதனால் மனம் வெறுத்த சேனாபதி சிங்கன், 'நான் இனி இந்த நாட்டின் ராஜாவுக்கு உழைப்பதில்லை' என்ற முடிவோடு மன்னரிடம் தன்னை அனுப்பி விடும்படி விடை கேட்டான். அந்தச் சமயத்திலாவது நிறையப் பொருள் கொடுத்துப் பாராட்டி விடை கொடுக்க மாட்டாரா கஞ்ச ராஜா என்று நினைத்தான் சிங்கன். ஆனால் அந்த ராஜா பலே ஆள். ''சரி, போய் வா!'' என்று கூறி வெறுங் கையோடு அனுப்பி விட்டார். சேனாபதி சிங்கனுக்கு ஆத்திரமான ஆத்திரம். ''உன் பொக்கிஷத்திலுள்ள பொருளை எல்லாம் நான் கொண்டு போகாவிட்டால் என் பெயர் சிங்கனல்ல'' என்று மனத்துக்குள் கறுவிக் கொண்டே அந்த நாட்டைவிட்டு வெளியேறினான்.

ஒரு காட்டின் வழியாகப் போய்க் கொண்டிருக்கும்போது ஓர் அதிசயமான மனிதனைக் கண்டான். அவன் ஆறு மரங்களைக் கைக்கு மூன்றாக வளைத்துப் புல் பூண்டைப் பிடுங்குவது போல் அலட்சியமாக வேரோடு பிடுங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய அபாரமான வலிமையைக் கண்ட சிங்கன் வியப்படைந்து, ''என்னோடு வருகிறாயா?'' என்று கேட்டான்.

''ஓ! வருகிறேனே! ஆனால் என் அம்மாவுக்கு அடுப்பெரிக்க இந்த விறகுக் கட்டைக் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வருகிறேன். கொஞ்சம் பொறு'' என்றவன் பிடுங்கிய ஒரு மரத்தினால் மற்ற ஐந்து மரங்களையும் கயிறு போலக் கட்டி வெகு அலட்சியமாகத் தூக்கிக் கொண்டு போய் வீட்டில் போட்டு விட்டுத் திரும்பி வந்தான். பிறகு இருவரும் பிரயாணப்பட்டார்கள்.

கொஞ்ச தூரம் போனதும் கையில் வில்லை நாணேற்றி அதில் அம்பைப் பொருத்தி ஒரு காலை மண்டியிட்டபடி எங்கோ எதையோ குறி பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு வேடனைக் கண்டான் சிங்கன். ''எதை வீழ்த்த இப்படிக் குறி பார்த்துக் கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டான் சேனாபதி.


''இங்கிருந்து இரண்டு மைல்



தூரத்தில் ஒரு மாமரத்தில் ஒரு மைஞ உட்கார்ந்திருக்கிறது. அதன் இடது காலே நோக்கிக் குறி பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்முன் வேடன்.

சேஞபதி திகைத்துப் போஞன். அத்தனை தூரத்திலுள்ள ஒரு பொருளே இவஞல் காண முடியுமாஞல் அது எத்தனை பெரிய சாகஸம்? ''மைஞ பிழைத்துப் போகட்டும். நீ என்னேடு வா, நாம் மூவரும் சேர்ந்து இந்த உலகத்தை ஒரு கை பார்ப்போம்'' என்று அழைக்கவே வேடனும் சேஞபதியுடன் சேர்ந்து கொண்டான்.

மூவரும் சிறிது தூரம் போனதும் அங்கு ஏழு நீர் இறைக்கும் காற்றுடி யந்திரங்கள் வெகு வேகமாக இயங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். ஆஞல் காற்று ஒரு பக்கத்திலிருந்து மட்டுமே வெகு வேகமாகப் புயல் போல



# ஆறு பேர் —விகேயம்—

வீசிக் கொண்டிருந்தது. காற்றுடியோடு இணைந்த குடுவைகள் கிணற்றிலிருந்து நீரை வேகமாக மேலே கொண்டு வந்து கொட்டிக் கொண்டிருந்தன. மனிதர்கள் யாரையும் காணும். கிணற்று நீர் பாயும் வாய்க்காலில் குளித்து வெளியேறிய மூவரும் காற்று வீசும் திசை நோக்கி மறுபடியும் பயணமாஞர்கள். கொஞ்ச நேரத்தில் அங்கு ஒரு மனிதன் ஒரு மேட்டில் உட்கார்ந்தபடி தன் மூக்கின் ஒரு துவாரத்தை விரல்களால் மூடிக் கொண்டு மறு துவாரத்திஞல் சுவாசித்துக் கொண்டிருந்தான்.

''என்னப்பா இது?'' என்று கேட்டான் சிங்கன்.

''நீங்கள் வரும் வழியில் ஏழு காற்றுடிகள் கிணற்றுநீரை வெளியேற்றிக் கொண்டிருப்பதைக் கண்டிருப்பீர்களே? அந்தக் காற்றுடி சுழல்வதற்கான காற்றைத்தான் நான் இங்கிருந்து ஊதிக் கொண்டிருக்கிறேன், என் ஒரு மூக்கிஞல். இரு மூக்கையும் திறந்து மூச்சு விட்டால் அந்தக் காற்றுடிகள் விண்



ளிலே பறந்து போய் பாழாகிப் போகும். அதனால் காற்றின் வேகத்தைக் குறைக்க ஒரு மூக்குத் துவாரத்தை மூடிக் கொண்டு சுவாசிக்கிறேன்'' என்றான் அந்த விந்தை மனிதன்.

''நீ இங்கிருந்து உன் திறமையைப் பாழாக்கிக் கொண்டிருக்க வேண்டாம். எங்களோடு சேர்ந்து கொள். நாம் நால்வரும் இவ்வுலகை வென்று வாழலாம்'' என்று அழைத்தான் சிங்கன். அவனும் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு கிளம்பினான்.

வெகுதூரம் போயிருக்கமாட்டார்கள், அந்த நால்வரும். அங்கு ஒரு மனிதன் ஒற்றைக் காலில் நின்று கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போனார்கள். நிற்க உதவும் காலில் மட்டும் காலணி இருந்தது. மற்றக் காலின் காலணி பக்கத்தில் கழற்றி வைக்கப்பட்டிருந்தது. காலணி இல்லாத கால் ஓய்வெடுத்துக் கொள்ளுபவரைப் போல் தொய்ந்த நிலையிலிருந்தது. இந்த விசித்திரத்துக்கு அந்த மனிதன் கொடுத்த விளக்கம் இதுதான்:


'' நான் என் இரு கால்களிலும் காலணிகளைப் போட்டுக் கொண்டேனானால் என் ஓட்டத்தை யாராலும் பிடிக்கவே முடியாது. பறவையைப் போல் அத்தனை வேகமாக ஓட ஆரம்பித்துவிடுவேன். அதனால்தான் ஒரு காலணியைக் கழற்றிப் போட்டிருக்கிறேன்.''

''அடேடே! இத்தகைய ஓட்டக்காரன் எங்களுக்கு உதவியாக இருக்கும். நீயும் எங்களுடன் சேர்ந்து கொள்'' என்றான் சிங்கன்.

அழைப்பை அந்த ஓட்டக்காரன் மறுக்கவில்லை. ஐவரும் கொஞ்ச தூரம் தான் போயிருப்பார்கள். வழியில் வேறொரு மனிதனைச் சந்தித்தார்கள். அவன் தலையில் பெரிய முண்டாசு கட்டிக் கொண்டிருந்தான். அதுவும் எப்படி ? ஒரு கண்ணை மறைத்தபடி.

''என்னப்பா, உன் ஒரு கண்ணில் ஏதாவது கோளாறு? அல்லது நோயா? ஏன் அதை அப்படி மூடிக் கட்டிக் கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டான் சிங்கன்.

'' நான் அந்தக் கண்ணை மூடாவிட்டால் விபரீதம் விளையும். நீங்களெல்லாம் இப்படி என் எதிரே நிற்க முடியாது. இரு கண்களாலும் நான்



## இலையின் பெருமை

**பூவண்ணன்**

மாமரத்தின் இலையாலே
மங்களத் தோரணம் கட்டிடலாம்

வேப்ப மரத்தின் இலையாலே
வெம்மை அம்மை நீக்கிடலாம்

தென்னை மரத்தின் இலையாலே
சிறந்த குடிசை வேய்ந்திடலாம்

வாழை மரத்தின் இலையாலே
வகையாய்ச் சோறு உண்டிடலாம்

வில்வ மரத்தின் இலையாலே
விளங்கும் சிவனை வழிபடலாம்

வேறு பற்பல இலைவகைகள்
விலங்கு தின்னும் உணவாகும்.

இப்படி உதவா இலைகூட
எருவாய் மாறிப் பயன்தருமே!

அப்படி நாமும் உதவிடுவோம்!
அழியாப் புகழும் அடைந்திடுவோம்!

பார்த்தேனானால் கடுமையான பனி மழை பெய்யும். எல்லாம் பனிக் கட்டிகளாகிவிடும். அதனால் ஒரு கண்ணை மூடி முண்டாசு கட்டியிருக்கிறேன்'' என்றான் அந்த ஒற்றைக் கண் மனிதன்.

''இத்தனை திறமைசாலியான நீ தனித்திருக்கக் கூடாது. எங்களோடு கிளம்பு'' என்றான். முண்டாசுக்காரனும் முணுமுணுக்காமல் அவர்களுடன் சேர்ந்து கொண்டான். தன் ஐந்து அபூர்வத் தோழர்களுடன் சேனாபதி சிங்கன் அந்த ராஜாவின் நாட்டை நோக்கிப் பயணமானான்.


அந்த ராஜாவுக்கு ஒரு பெண். அவள் ஓட்டத்தில் சூரப்புலி. இல்லை வேங்கை. அவள் வேகத்துக்கு இதுவரையில் யாரும் ஓடி அவளை வெற்றிகொண்டதில்லை. ஆகவே ராஜா தன் மகளின் இந்தத் திறமையையே பந்தயமாக்கி அவளுக்கு ஒரு கணவனைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்தார். ''என் மகளை ஓட்டத்தில் வெல்பவர் அவளையே மணக்கலாம். தோற்றவர் தம் தலையை இழக்க வேண்டி வரும்'' என்று அறிவித்திருந்தார். இதைக் கேள்விப்பட்ட சிங்கன் மாறுவேடம் அணிந்து தன் தோழர்களுடன் மன்னனின் முன்னால் போனான்.

''உங்கள் நிபந்தனைப்படி என் பணியாளர்களில் ஒருவன் உங்கள் மகளோடு ஓட அனுமதியுங்கள். ஆனால் வெற்றி பெற்றால் உங்கள் மகளை நான்தான் மணப்பேன்''. என்றான்.

'' உன் நிபந்தனையை ஏற்கிறேன். ஆனால் ஒன்று. தோற்றால் உன் பணியாளனோடு உன் தலையும்கூடத் தரையில் உருளும். நினைவிருக்கட்டும் !'' என்றார் ராஜா. சிங்கன் சம்மதித்தான்.

பந்தயக் குறியிடம் அரண்மனையிலிருந்து வெகு தொலைவிலுள்ள ஒரு மலை. அங்கு ஒரு நீர்வீழ்ச்சி. அங்கு போய் அதன் நீரை ஒரு பாத்திரத்தில் மொண்டு வர வேண்டும். முதலில் திரும்புபவரே வெற்றி பெற்றவர்.

சிங்கனின் தோழனான ஓட்டக்காரன் தன் இரு கால்களிலும் காலணிகளை மாட்டிக் கொண்டான். இளவரசி, ஓட்டக்காரன் இருவரிடமும் ஒரு பொற்பாத்திரம் தரப்பட்டது. இளவரசி மான் எனத் துள்ளிப் பாய்ந்தாள். ஆனால் ஓட்டக்காரனோ இமைக்கும் நேரத்தில் அவளைக் கடந்து சென்றவன் கண்ணுக்



## வீட்டுத் தோட்டம்

ரமா ராமநாதன்

பாழுந் தரிசில் வேலியிடு
பக்குவ மாகப் பண்படுத்து
வாழை கிழங்கு அவரையிடு
வண்டல் மண்ணும் வாரியிடு.

வெண்டை கத்தரி புடலையிடு
வெள்ளரி பாகல் இளவனிடு
தண்டுக் கீரை அரைக்கீரை
தக்காளி மிளகு சுரைபோடு.

வாச முருங்கை கொய்யாவும்
வருக்கைப் பலாவும் எலுமிச்சும்
ஆசை முந்திரி மாதுளையும்
அறிந்து மாவும் தென்னைநடு.

வெட்டிக் கிளைக்க நீர்வார்க்க
வியர்வை ஓடி உடல்வலுக்கும்
கட்டி மண்ணைப் பொன்னுக்க
களைக்கக் களைக்க உழைப்பாயே!

குத் தெரியாமல் மறைந்தே போனான். மலைக்குப் போய் நீர்வீழ்ச்சி நீரைப் பாத்திரத்தில் நிரப்பிக் கொண்டு திரும்பியவன் 'இளவரசி வருவதற்குள் ஒரு தூக்கம் போடலாமே, என்ன அவசரம்?' என்று ஒரு கல்லைத் தலையணையாக்கிக் கொண்டு கண்ணயர்ந்து போனான்.

நீர் வீழ்ச்சிக்குப் போய் ஊற்று நீருடன் திரும்பிய இளவரசி தன்னை வெற்றி கொள்ளப் போகிறவன் விழுந்து தூங்குவதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தாள். அவன் அருகிலிருக்கும் ஊற்று நீரை உருட்டிக் கொட்டிவிட்டு இன்னும் வேகமாக ஓடலானாள்.

ஆனால் கோட்டை மதில் மீது சிங்கனும் அவன் தோழர்களும் நின்றுகொண்டிருப்பது பாவம் இளவரசிக்குத் தெரியாது. சிங்கனின் தோழர்களில் ஒருவனை வேடன் இளவரசியின் செய்கைகளைப் பார்த்துக் கொண்டேயிருந்தான். உடனே தன் வில்லை வளைத்து ஓர் அம்பைக் கொண்டு ஓட்டக்காரத் தோழனின் தலையணைக் கல்லை உருட்டிவிட்டான். திடுக்கிட்டுக் கண் விழித்த அவன், பொற் கலசம் உருண்டு கிடப்பதைக் கண்டு நடந்ததை யூகித்துக் கொண்டு ஒரே பாய்ச்சலில் மறுபடியும் நீர்வீழ்ச்சிக்குப் போய்ப் பாத்திரத்தில் நீரை நிரப்பிக் கொண்டு குறியிடத்தை நோக்கிப் பாய்ந்து கொண்டிருக்கும் இளவரசியைக் கடந்து மன்னரின் கையில் கலச நீரைக் கொடுத்தான்.

நிபந்தனைப்படி இளவரசி சிங்கனின் உடைமையானாள். ஆனால் அரசருக்கு ஒரு சாமானியனுக்குத் தம் மகளை மணம் முடிப்பதா என்றும், இளவரசிக்கு ஒரு நாடோடிக்குத் தான் மனைவியாவதா என்றும் வேதனை ஏற்பட்டது. இவர்களை எப்படியாவது ஏமாற்றி ஒழித்துக் கட்டி இந்த இக்கட்டிலிருந்து தப்பிவிட எண்ணினார் ராஜா. உள்ளுக்குள் புழுங்கினாலும் வெளியில் மகிழ்ச்சி காட்டி அந்த ஆறு பேரையும் விருந்துக்கு அழைத்தார் ராஜா. இவர்களுக்கு விருந்தளிக்கவென்றே ஒரு விசேஷ அறையை உருவாக்கினார். அது இரும்புச் சுவர்களையும் இரும்பு விதானங்களையும் கொண்டது. அறையின் நடுவில் நீண்ட மேஜையில் விதம் விதமான இன்சுவை உண்டிகளை நிரப்பினார். ஆறு நண்பர்களையும் பார்த்து, ''உள்ளே போய் உங்களுக்கு விருப்பமானவற்றை இஷ்டம் போல் உண்டு களியுங்கள்'' என்று அவர்களை உள்ளே அனுப்பிக் கதவை மூடிப் பூட்டிவிட்டார்.

அந்த அறைக்குக் கீழே பெரிய அக்கினிக் குண்டம் அமைத்து அதில் பெரும் பெரும் கட்டைகளைப் போட்டுத் தீ மூட்டி எரிக்கச் சொன்னார் ராஜா. இரும்பு அறைக்குள் இருக்கும் ஆறு பேரையும் அப்படியே சுட்டுப் பொசுக்கிச் சாம்பலாக்கிவிடுவதே அவரது திட்டம். ராஜாவின் உத்தரவுப்படி இரும்பு அறை பழுக்கக் காய்ச்சப்பட்டது. உள்ளிருப்போருக்குத் தாங்க முடியாத உஷ்ணம் ஏற்படவே வெளியேற முயன்றார்கள். அறையின் கதவு ஜன்னல்கள் அடைக்கப்பட்டிருப்பதைக் கண்டதும்தான் தாங்கள் வஞ்சிக்கப்பட்டது புரிந்தது. உடனே முண்டாசுக்காரன், ''கவலைப்படாதீர்கள். நான் இருக்கப் பயமேன்?'' என்றவன் தன் மூடிய கண் கட்டை அவிழ்க்கவே பனிப் புயல் வீசலாயிற்று. சற்றைக்கெல்லாம் எல்லோரும் வெடவெடவென்று குளிரினால் நடுங்க ஒருவரை மற்றவர் கட்டிக் கொண்டு பற்கள் தாளம் போடத் தவிக்கலானார்கள். ராஜாவின் அக்கினிக் குண்டத்தின் உஷ்ணம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிற்று.

கொஞ்ச நேரம் கழித்து விருந்தாளிகள் கருகிச் சாம்பலாகி இருப்பார்கள் என்று மகிழ்ச்சியோடு கதவைத் திறந்து பார்த்த ராஜாவுக்கு அதிர்ச்சியான அதிர்ச்சி. ''எங்களால் இங்கு இந்தக் குளிரில் இருக்க முடியவில்லை. வெளியே வருகிறோம். உணவுப் பொருள்களெல்லாம் சில்லிட்டுப்போய் விட்டன'' என்றபடி ஆறு பேரும் வெட வெட வென்று நடுங்கியபடி வெளியே வந்தார்கள். ராஜாவுக்கு எப்படி இருக்கும்? ஆத்திரத்துடன் பாதாளக் கிடங்குக்குப் போய்த் தம் பணியாளர்களிடம் கத்தினார், ''முட்டாள்களா! கட்டைகளைப் போட்டு அக்கினிக் குண்டத்தில் எரிக்கவில்லையா?'' என்று. ''வந்து பாருங்கள்'' என்று அவரை அருகே அழைத்துப் போனார்கள். அவரால் நெருங்க முடியவில்லை. அத்தனை தழல். 'அப்படியானால் அவர்கள் எப்படி...?' என்ற ராஜாவுக்குப் புரியவில்லை.

வேறு வழி இல்லாத ராஜா வெற்றி பெற்ற சிங்கனிடம் பேரம் பேசலானார். ''நிபந்தனைப்படி என் மகளை உனக்குத் தர வேண்டியதுதான். ஆனால் என் மகளுக்குச் சாமானியனை உன்னை மணக்க விருப்பமில்லை. ஆகவே என் மகளை நீ விட்டுக் கொடுப்பதானால் நீ கேட்கும் பொருளை உனக்குத் தருகிறேன். சம்மதமா?'' என்றார்.

ராஜாவைப் பழி வாங்கும் நோக்கத்துடன் வந்தவன்தானே சிங்கன், அவரது மகளை மணக்கவா விரும்பினான்? இல்லையே! ஆகவே, ராஜாவின் இந்த மாற்று யோசனைக்கு இணங்கினான்.

''உங்கள் விருப்பப்படியே உங்கள் மக்களிடம் எனக்குள்ள உரிமையை விட்டுக் கொடுத்து விடுகிறேன். என் பணியாளன் தூக்குமளவுக்கு நீங்கள் பொருள் கொடுத்தால் போதும்'' என்றான் சிங்கன். ராஜாவுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. ஒரு பணியாளன் எத்தனை பொன்னைச் சுமக்கப் போகிறான் என்று நினைத்தார் ராஜா. ஆனால் பாவம் அவருக்கு ஆறு மரங்களை ஒரே அசைப்பில் பிடுங்கும் அற்புத ஆற்றல் படைத்த பணியாளன் சிங்கனிடம் இருப்பது தெரியாது.

''இன்னும் பதினைந்து தினங்களில் என்னுடைய ஊழியன் சாக்குடன் வருவான். அது நிறையப் பொற்காசுகளை அனுப்பி வையுங்கள்'' என்று விடை பெற்றுக் கொண்டான் மாறு வேடத்திலிருந்த சேனாபதி சிங்கன். அவன் பதினைந்து நாட்கள் தவணை கேட்டது எதற்காகத் தெரியுமா? மிக மிகப் பெரிய சாக்குப் பை ஒன்று தயாரிக்கத்தான். உறுதியான கோணிகளைக் கொண்டு பிரும்மாண்டமான கோணிச் சாக்கு ஒன்று தயாரித்துத் தன் 'மரம் பிடுங்கி' மகாதேவனை பலவானை அரண்மனைக்கு அனுப்பி வைத்தான்.

ராட்சத பலம் கொண்ட அவனைக் கண்டதுமே ராஜாவுக்கு என்னவோ போலிருந்தது. அவன் தன் சாக்குப் பையை விரித்ததும் பிரமித்துப்போனார். ஒரு வண்டி நிறையப் பொற்காசுகள் கொண்டு வரப்பட்டது. அதைப் பதினாறு மனிதர்கள் இழுத்து வந்தார்கள். ஆனால் சிங்கனின் பணியாளனோ அதைத் தலையணைக்குப் பஞ்சு திணிப்பது போல் அலட்சியமாக அள்ளித் தன் பைக்குள் வீசினான். ''சீக்கிரம் கொண்டு வரச் சொல்லுங்கள். என் பையின் மூலைகூட நிரம்பவில்லையே?'' என்று கடுகடுத்தான். வண்டி வண்டியாகப் பொற் குவியல்கள் வந்த வண்ணம் இருந்தன. அத்தனையையும் அந்தச் சாக்கு அடக்கிக் கொண்டது. ஆனாலும் கால் பாகம்கூட நிரம்பவில்லை. ''பொற்காசுகள்தான் வேண்டும் என்பதில்லை. எதுவானாலும் பரவாயில்லை. கொண்டு வாருங்கள்'' என்றான் சிங்கனின் பணியாள். வெள்ளித் தங்கப் பாத்திரங்கள், நகைகள், பட்டுப் பட்டாடைகள் என்று விலை உயர்ந்த பொருள்களை எல்லாம் கொண்டுவந்து குவித்தார்கள். அத்தனையையும் சாக்கு மூட்டைக்குள் திணித்தும் அது நிரம்பவில்லை. ''சரி, சரி, என்னால் இன்னமும் இப்படிப் பொருள் சேகரித்துக் கொண்டிருக்க முடியாது'' என்று சாக்குப் பையைச் சுருக்கிக் கட்டித் தோள்மீது போட்டுக் கொண்டு நடந்தான். அது எத்தனை பெரிய மூட்டையாக இருக்கும்? அதைத் தூக்கிக் கொண்டு நடப்பவன் எத்தகைய பலசாலியாக இருப்பான்? கற்பனை செய்து பாருங்கள்.


தன் நாட்டின் செல்வங்கள் அனைத்தையும் ஒரு மனிதன் இப்படி அள்ளிக் கொண்டு போவதைக் கண்ட கஞ்ச ராஜாவுக்கு நெஞ்செல்லாம் எரிந்தது. தம் பெரும் படையை அவன் பின்னால் அனுப்பி அவனைக் கொன்று செல்வத்தை மீட்டு வர ஆணையிட்டார். குதிரைப் படைகள் பறந்தன. இதற்குள் சாக்கு மூட்டை தூக்கி தன் நண்பர்களிடம் போய்விட்டான். குதிரைப் படை அந்த ஆறு பேரையும் சூழ்ந்து கொண்டது. ''எங்கள் நாட்டின் செல்வத்தைக் கொள்ளையிட்டுச் செல்லும் நீங்கள் எங்கள் கைதிகள். மூட்டையை ஒப்படைத்துவிட்டு ஓடுங்கள்'' என்றான் குதிரைப் படைத் தலைவன்.

ஆனால் அதற்கு ஒற்றை மூக்கால் சுவாசித்து ஏழு காற்றாடி யந்திரங்களை இயக்கினானே அவன் பதில் கொடுத்தான்.

''என்ன சொன்னாய்? நாங்கள் கைதிகளா? ஓடவா வேண்டும்? இதோ பாருங்கள். 'யார் இப்போது ஓடப் போகிறார்கள் என்பதை'' என்று கூறியபடி ஒரு மூக்குத் துவாரத்தை மூடிக் கொண்டு மற்றதினால், ''ம்'' என்று மூச்சு விட்டு ஊதினான். என்ன நடந்திருக்கும்? குதிரை வீரர்கள் குதிரையோடு வானத்திலே காய்ந்த சருகுகள் பறக்குமே, அப்படிப் பறந்தார்கள். பாவம், ஒரே ஒரு வீரன் மட்டும் இந்த ஆறு அதிசய மனிதர்களின் கால்களில் விழுந்து தன்னைக் காப்பாற்றும்படி கெஞ்சவே, அவனை மட்டும் அதிக பலம் இல்லாதபடி ஊதினான் ஒற்றை மூக்கு ஓட்டைக்காரன். அதற்கே அவன் காற்றில் மிதந்தபடி ராஜாவின் முன்னால் போய்ப் பொத்தென்று விழுந்தான். நடந்ததை அவன் விவரித்து, ''நாம் எத்தனை போர்வீரர்களை அனுப்பினாலும் அத்தனை பேர்களையும் அவர்கள் ஊதிப் பறக்கடித்துவிடுவார்கள்'' என்றான். இதற்குப் பிறகும் படைகளை அனுப்ப அந்த ராஜா அத்தனை முட்டாளா என்ன?

''போகட்டும் பயல்கள். நிபந்தனைப்படி வெற்றி பெற்றுப் போகிறவர்களை வீண் வம்புக்கு இழுப்பானேன்?'' என்று புத்திசாலித்தனமாகப் பேசாதிருந்துவிட்டார்.

கஞ்ச ராஜாவின் ஏராளமான செல்வத்தை ஆறு பேரும் பங்கிட்டுக்கொண்டு சௌக்கியமாக வாழ்ந்து வந்தார்கள்.





# குழந்தைகள் ரயில்

**என். வி. ஆர். ஸ்வாமி**

சிறுவர்களே நடத்தி வரும் ஒரு ரயில் நிர்வாகத்தை உடைய பெருமை தில்லி நகருக்குத்தான் உண்டு. ஆசியா கண்டத்திலேயே வேறெங்கும் இது மாதிரி கிடையாது. குழந்தைகளே ஓட்டி, நடத்தி வரும் இந்த ரயில் வண்டி தில்லியிலுள்ள 'பாலர் பவன'த்தின் ஒரு பகுதியாக இயங்கி வருகிறது.

குழந்தைகள் விளையாடுவதற்கென்று தகரத்தில் எஞ்சின் செய்து விற்கிறார்களே அதுவல்ல இது. சாவி கொடுத்துத் திருகிவிட்டால், கொஞ்ச தூரம் ஓடி, சுவரில் மோதி நின்றுவிடுமே அந்த ரயில் வண்டியும் அல்ல. ஆனால் உண்மையான ரயில் வண்டி.


தண்டவாளத்தின் மீது ஓடும். ரயில் எஞ்சின் 'கூ' என்று ஊதும். ஸ்டேஷனில் தாமதிக்கும். கைகாட்டி இறங்கா விட்டால் அப்படியே நின்றுவிடும். காசு கொடுத்து டிக்கெட்



வாங்கிக் கொண்டு, அந்த ரயில் வண்டியில் நாமும் கொஞ்ச தூரம் பிரயாணம் செய்யலாம். அதை நிர்வகித்து நடத்துகிறவர்கள் எல்லோரும் ஐந்துக்கு மேல் பதினாறு வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர்களே.

பாலர் பவனத்தின் ஒரு பக்கத்தில் இந்த ரயில்வே ஸ்டேஷன் அமைந்திருக்கிறது. சாதாரணமாக, ரயில்வே ஸ்டேஷன் ஒன்றில் காணப்படும் எல்லாப் பகுதிகளையும் தத்ரூபமாக இங்கேயும் காண்கிறோம். ஸ்டேஷன் மாஸ்டரின் அறை, டிக்கெட் கொடுக்கும் ஆபீஸ் போன்ற எல்லாம் இங்கே அழகாக அமைந்திருக்கின்றன. சிற்றுண்டிச்சாலை, பிரயாணிகள் தங்குமிடம் ஆகியவையும் சகல வசதிகளோடு இங்கே உண்டு.

ரயில்வே ஸ்டேஷனுக்குக் 'கேல்–காம்' (Khel Gaom) அதாவது 'விளையாட்டுக் கிராமம்' என்று பெயர். நம் ஊர்களில் டிக்கெட் வாங்குமிடத்தில் ஒரே இரைச்சலும், ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு டிக்கெட் வாங்க முயலும் இடிசல் நெரிசலுமாய் இருக்குமே, இந்த ஸ்டேஷனிலோ, டிக்கெட் கொடுக்கும் இடத்தில் அப்படிப்பட்ட சந்தடி ஏதும் இல்லை. குழந்தைகளும் சரி, பெரியவர்களும் சரி, எல்லாரும் 'க்யூ' வரிசையில் நின்று கொண்டு ஐம்பது காசுகள் கொடுத்து டிக்கெட் வாங்கிப் பிளாட்பாரத்துக்குச் செல்கிறார்கள். குழந்தைகளை இங்கே அழைத்து வந்திருக்கும் பெற்றோர்களும் இந்த ரயில் வண்டியில் பிரயாணம் செய்யலாம்! பிளாட்பாரத்தில் ரயில் வண்டி நின்று கொண்டிருக்கிறது. எல்லாவிதத்திலும் சாதாரண எஞ்சின் போலத்தான் இதன் எஞ்சினும் தோன்றுகிறது. ஆனால் உருவத்தில் மட்டும் சிறியதாக இருக்கிறது. பிரயாணிகள் அமரும் வண்டியும் சிறியதுதான். 'மேல்கூரை' இல்லாமல் திறந்துதான் இருக்கும். ஒரு சீட்டுக்கு இரண்டு பேர் வீதம்





முன் பக்கம் மேலே: 1. ஸ்டேஷனில் டிக்கெட் பரிசோதனை நடக்கிறது. 2. குழந்தைகள் ரயில் வண்டியில் பிரயாணம் செய்கிறார்கள்.

கீழே: 3. ஸ்டேஷனிலிருந்து ரயில் புறப்படுகிறது.

இந்தப் பக்கம்: கீழே - குகை வழியாக ரயில் செல்லும் காட்சி.

வலது: கைகாட்டி விசை பழுது பார்க்கப்படுகிறது.

அடுத்த பக்கம்: லெவல் கிராசிங்கை ரயில் தாண்டிச் செல்லுகிறது. □

குத் தெரியாமல் மறைந்தே போனான். மலைக்குப் போய் நீர்விழ்ச்சி நீரைப் பாத்திரத்தில் நிரப்பிக் கொண்டு திரும்பியவன் 'இளவரசி வருவதற்குள் ஒரு தூக்கம் போடலாமே, என்ன அவசரம்?' என்று ஒரு கல்லைத் தலையணையாக்கிக் கொண்டு கண்ணயர்ந்து போனான்.

நீர் விழ்ச்சிக்குப் போய் ஊற்று நீருடன் திரும்பிய இளவரசி தன்னை வெற்றி கொள்ளப் போகிறவன் விழுந்து தூங்குவதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தாள். அவன் அருகிலிருக்கும் ஊற்று நீரை உருட்டிக் கொட்டிவிட்டு இன்னும் வேகமாக ஓடலானாள்.

ஆனால் கோட்டை மதில் மீது சிங்கனும் அவன் தோழர்களும் நின்றுகொண்டிருப்பது பாவம் இளவரசிக்குத் தெரியாது. சிங்கனின் தோழர்களில் ஒருவனை வேடன் இளவரசியின் செய்கைகளைப் பார்த்துக் கொண்டேயிருந்தான். உடனே தன் வில்லை வளைத்து ஓர் அம்பைக் கொண்டு ஓட்டக்காரத் தோழனின் தலையணைக் கல்லை உருட்டிவிட்டான். திடுக்கிட்டுக் கண் விழித்த அவன், பொற் கலசம் உருண்டு கிடப்பதைக் கண்டு நடந்ததை யூகித்துக் கொண்டு ஒரே பாய்ச்சலில் மறுபடியும் நீர்விழ்ச்சிக்குப் போய்ப் பாத்திரத்தில் நீரை நிரப்பிக் கொண்டு குறியிடத்தை நோக்கிப் பாய்ந்து கொண்டிருக்கும் இளவரசியைக் கடந்து மன்னரின் கையில் கலச நீரைக் கொடுத்தான்.


நிபந்தனைப்படி இளவரசி சிங்கனின் உடைமையானாள். ஆனால் அரசருக்கு ஒரு சாமானியனுக்குத் தம் மகளை மணம் முடிப்பதா என்றும், இளவரசிக்கு ஒரு நாடோடிக்குத் தான் மனைவியாவதா என்றும் வேதனை ஏற்பட்டது. இவர்களை எப்படியாவது ஏமாற்றி ஒழித்துக் கட்டி இந்த இக்கட்டிலிருந்து தப்பிவிட எண்ணினார் ராஜா. உள்ளுக்குள் புழுங்கினாலும் வெளியில் மகிழ்ச்சி காட்டி அந்த ஆறு பேரையும் விருந்துக்கு அழைத்தார் ராஜா. இவர்களுக்கு விருந்தளிக்கவென்றே ஒரு விசேஷ அறையை உருவாக்கினார். அது இரும்புச் சுவர்களையும் இரும்பு விதானங்களையும் கொண்டது. அறையின் நடுவில் நீண்ட மேஜையில் விதம் விதமான இன்சுவை உண்டிகளை நிரப்பினார். ஆறு நண்பர்களையும் பார்த்து, ''உள்ளே போய் உங்களுக்கு விருப்பமானவற்றை இஷ்டம் போல் உண்டு களியுங்கள்'' என்று அவர்களை உள்ளே அனுப்பிக் கதவை மூடிப் பூட்டிவிட்டார்.

அந்த அறைக்குக் கீழே பெரிய அக்கினிக் குண்டம் அமைத்து அதில் பெரும் பெரும் கட்டைகளைப் போட்டுத் தீ மூட்டி எரிக்கச் சொன்னார் ராஜா. இரும்பு அறைக்குள் இருக்கும் ஆறு பேரையும் அப்படியே சுட்டுப் பொசுக்கிச் சாம்பலாக்கிவிடுவதே அவரது திட்டம். ராஜாவின் உத்தரவுப்படி இரும்பு அறை பழுக்கக் காய்ச்சப்பட்டது. உள்ளிருப்போருக்குத் தாங்க முடியாத உஷ்ணம் ஏற்படவே வெளியேற முயன்றார்கள். அறையின் கதவு ஜன்னல்கள் அடைக்கப்பட்டிருப்பதைக் கண்டதும்தான் தாங்கள் வஞ்சிக்கப்பட்டது புரிந்தது. உடனே முண்டாசுக்காரன், ''கவலைப்படாதீர்கள். நான் இருக்கப் பயமேன்?'' என்றவன் தன் மூடிய கண் கட்டை அவிழ்க்கவே பனிப் புயல் வீசலாயிற்று. சற்றைக்கெல்லாம் எல்லோரும் வெடவெடவென்று குளிரினால் நடுங்க ஒருவரை மற்றவர் கட்டிக் கொண்டு பற்கள் தாளம் போடத் தவிக்கலானார்கள். ராஜாவின் அக்கினிக் குண்டத்தின் உஷ்ணம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிற்று.

கொஞ்ச நேரம் கழித்து விருந்தாளிகள் கருகிச் சாம்பலாகி இருப்பார்கள் என்று மகிழ்ச்சியோடு கதவைத் திறந்து பார்த்த ராஜாவுக்கு அதிர்ச்சியான அதிர்ச்சி. ''எங்களால் இங்கு இந்தக் குளிரில் இருக்க முடியவில்லை. வெளியே வருகிறோம். உணவுப் பொருள்களெல்லாம் சில்லிட்டுப்போய் விட்டன'' என்றபடி ஆறு பேரும் வெட வெட வென்று நடுங்கியபடி வெளியே வந்தார்கள். ராஜாவுக்கு எப்படி இருக்கும்? ஆத்திரத்துடன் பாதாளக் கிடங்குக்குப் போய்த் தம் பணியாளர்களிடம் கத்தினார், ''முட்டாள்களா! கட்டைகளைப் போட்டு அக்கினிக் குண்டத்தில் எரிக்கவில்லையா?'' என்று. ''வந்து பாருங்கள்'' என்று அவரை அருகே அழைத்துப் போனார்கள். அவரால் நெருங்க முடியவில்லை. அத்தனை தழல். 'அப்படியானால் அவர்கள் எப்படி...?' என்ற ராஜாவுக்குப் புரியவில்லை.

வேறு வழி இல்லாத ராஜா வெற்றி பெற்ற சிங்கனிடம் பேரம் பேசலானார். ''நிபந்தனைப்படி என் மகளை உனக்குத் தர வேண்டியதுதான். ஆனால் என் மகளுக்குச் சாமானியனை உன்னை மணக்க விருப்பமில்லை. ஆகவே என் மகளை நீ விட்டுக் கொடுப்பதானால் நீ கேட்கும் பொருளை உனக்குத் தருகிறேன். சம்மதமா?'' என்றார்.

ராஜாவைப் பழி வாங்கும் நோக்கத்துடன் வந்தவன்தானே சிங்கன், அவரது மகளை மணக்கவா விரும்பினான்? இல்லையே! ஆகவே, ராஜாவின் இந்த மாற்று யோசனைக்கு இணங்கினான்.
















# சிரிக்கச் சிரிக்க...

சாமா





ஷீலாவைக் காணோம்
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி..
16
காட்டு மரக்கெப்பும் கரையிலிருந்து ஒதுங்கி நீர் ஓட்டத்தோடு நடு ஆற்றுக்குத் திரும்பியது. அவர்களும் கரையோடு, தொடர்ந்து வந்தார்கள் துரத்திக் கொண்டு...
அந்தப் பாவிகளிடம் நாம் சிக்காமலிருக்க வேண்டுமே டைகர்.
இந்தக் காட்டாறு வர வரப் பெரிய நதியாகி விட்டதே. வேகமான வேகம். நடு நடுவே பாறைகள் வேறு. இந்த மரம் இந்தப் பாறைகளில் மோதுமானால்...
காட்டாற்று வெள்ளத்திலே, கட்டைத் தெப்பத்திலே ஷீலாவும் டைகரும் போய்க் கொண்டிருந்த அதே சமயத்தில், அவன் ஏறி வந்த குதிரை நிஜவின் முன்னால் போய் நிற்கிறது..
என்ன, நீ மட்டும் வந்திருக்கே? அந்தப் பொண்ணு எங்கே? நான் சாப்பாட்டுக்காக வந்த போது அந்தப் பயல்கள் எப்படியோ பாழுங்கிணற்றிலிருந்து தப்பித்து விட்டாங்க. ஷீலா பொண்ணுக்கு ஆபத்துன்னு தெரிஞ்தேன். அப்படியே ஆயிடுச்சு..
நீ... வேகமாப் போ. உன்னை நம்பி அந்தப் பொண்ணைத் தனியா அனுப்பினேன். நீ இப்படிச் செஞ்சுட்டியே. சீக்கிரம் போலீசுக்குத் தகவல் கொடுக்கணும்... ஓடு.
போலீஸ் நிலையத்தில் தேடப்பட்டு வரும் கொள்ளைக்காரர்களின் புகைப்படமிருக்கிறது. அதைக் கண்ட நிஜவர்...
இந்தப் படத்திலுள்ளவர்கள் இருக்குமிடம் எனக்குத் தெரியும். அவர்களைப் பிடிப்பதோடு ஒரு சின்னப் பொண்ணையும் காப்பாத்தின மாதிரி ஆகும்.



கிழவர் கூறியதிலிருந்து அந்தப் பெண் கங்காராமின் மகள் என்பதை ஊகித்துக் கொண்டார் இன்ஸ்பெக்டர்..
பெரியவரே, அந்தப் பெண்ணு ஒரு பெரிய செல்வந்தரோட ஒரே செல்வ மகள். தம் மகளைக் கண்டு பிடிக்க கங்காராம் ஷெரிப் காப்டரையே கூட அனுப்பு வாரு. நீங்கள் கவலைப் பட வேண்டாம்.
அதே சமயம் காட்டாற்றில்... ஆறு நீர் வீழ்ச்சியாக விழுந்தது. அங்கு
டைகர்... டைகர்...
நல்ல வேளை, ஒரு பாறை உதவியது. ஆனால் இந்த வெள்ள வேகத்தோடு இப்படியே எந்நேரம் போராட முடியும்?
ஆபத்தில் ஆண்டவன் உதவுவான் என்பார்கள். ஆனால் ஷீலாவுக்கோ ஆபத்தில் உதவ அந்த அயோக்கியர்கள் தான் வந்தார்கள்.
ஏ, பொண்ணு! இதோ இதைப் பிடிச்சுக்கோ. உயிர் பிழைக்கணும்னா வேறு வழியே கிடையாது.
வேறு வழி இல்லை தான் ஷீலாவுக்கு, அவர்கள் பிடியில் சிக்குவதைத் தவிர.
எச்சரிக்கையா இரு. தப்பி ஓடிப் போறு.
நான் இல்லை விழுந்தாலே போனது... உடம்பு நடுங்கிட்டு இருந்தது அப்பப்பா...
அதே சமயம் வேறு பகுதியில் கரையேறிய டைகர் இவர்களை நோக்கி..

தொடரும்..




# குள்ளன் கொடுத்த வரம்

வாண்டு



ஓர் அரசருக்கு மூன்று குமாரிகள் இருந்தார்கள். அவர்களுக்குத் தாயார் இல்லை. ஆகவே ராஜகுமாரிகளிடம் மன்னர் உயிரையே வைத்திருந்தார். அரண்மனைத் தோட்டத்தில் ஏராளமான மலர்ச் செடிகளும் பழ மரங்களும் இருந்தன. அரசகுமாரிகள் ஆடிப் பாடி மகிழ்வார்கள். பல நேரங்களில் அவர்களோடு மன்னரும் கலந்து கொள்ளுவார். அரசகுமாரிகள் வளர்ந்து பெரியவர்களானார்கள். ஒரு நாள் அரசர் அவர்களிடம், "நீங்கள் அரண்மனைத் தோட்டத்தில் எங்கு வேண்டுமானாலும் போகலாம். எந்தப் பழத்தையும் பறித்துச் சாப்பிடலாம். ஆனால் வடக்குக் கோடியிலுள்ள ஒரு பெரிய மாமரத்தின் பழங்களை மட்டும் சாப்பிட்டு விடாதீர்கள். சாப்பிட்டால் அவர்களைப் பூமியிலிருந்து பாதாள உலகுக்குக் கொண்டு போய்ச் சேர்த்து விடும்" என்று எச்சரித்தார். குமாரிகளும் அதன்படியே நடப்பதாக ஒப்புக் கொண்டார்கள்.

அடுத்த வருஷம் மாம்பழக் காலம் வந்தது. மரங்களில் பழங்கள் காய்த்துப் பழுத்துக் குலுங்கின. ஒரு காரியத்தைச் செய்யக் கூடாது என்னும்போது தான் அதில் ஒரு தனி ஈடுபாடும் ஆசையும் ஏற்படும். இது மனித இயல்பு. அரச குமாரிகள் அப்பா குறிப்பிட்ட மரத்தைப் போய்ப் பார்த்தார்கள். அற்புதமான அழகோடு பெரிய பெரிய மாம் பழங்கள் காய்த்துத் தொங்கிக் கொண்டிருந்தன. இளவரசிகளுக்கு நாக்கில் நீர் சுரந்தது. ஆனால் அப்பாவின் எச்சரிக்கை நினைவுக்கு வரவே ஏக்கத்துடன் திரும்பிவிடுவார்கள். ஆனால் தினமும் அந்த மரத்தைப் போய்ப் பார்ப்பதை மட்டும் விடவில்லை. ஏதா





வது ஒரு பழம் காற்றில் கீழே விழுந்திருக்காதா என்று தேடுவார்கள். ஆனால் பலன் ஏமாற்றம்தான்.

ஒரு நாள் கடைக்குட்டி இளவரசி, ''நம் தகப்பனார் நம் மீது உயிரையே வைத்திருக்கிறார். அப்படி இருக்க அவர் நம்மைப் பாதாள லோகத்துக்கு இழக்க நினைப்பாரா? இந்த எச்சரிக்கை நமக்காக இருக்காது. மற்றவர்களுக்காகத்தான் இருக்கும். ஆகவே இம்மரத்தின் பழங்களை நாம் சுவைத்து மகிழலாம்'' என்று கூறவே ஆசையை அடக்கமாட்டாத அக்காக்களும் அதற்கு இணங்கினார்கள். ஆளுக்கொரு மாம்பழத்தைப் பறித்து உண்டார்கள். அதே சமயம் பூமி பிளக்க மூவரும் அதற்குள் மூழ்கி மறைந்தும் போனார்கள்.

தம் அருமைக் குழந்தைகளைக் காணாத மன்னர் தவித்துப் போனார். நாடெங்கும் வீரர்களைக் கொண்டு தேடச் செய்தார். பலன் இல்லை. ''என் குமாரத்திகளை யார் தேடிக் கொண்டு வருகிறார்களோ, அவர்களுக்கு அவர்களையே மனைவியாக்கி வைப்பேன்'' என்று நாடு நகரமெங்கும் பறைசாற்றினார். ஏராளமான வீரர்கள் இளவரசிகளைத் தேடிக் கிளம்பினார்கள்.


இப்படிக் கிளம்பியவர்களில் மூன்று சகோதரர்களும் இருந்தார்கள். இவர்கள் வேட்டையாடுவதில் வல்லவர்கள். இளவரசியையும் அதிர்ஷ்டத்தையும் தேடிக் கொண்டு வந்த இவர்கள் எட்டு நாட்கள் பிரயாணத்துக்குப் பிறகு ஒரு பெரிய கோட்டைக்கு வந்தார்கள். அதனுள்ளிருந்த அரண்மனை அற்புதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஒரு பெரிய அறையின் நடுவே விதம் விதமான உணவுப் பண்டங்கள் அப்போதுதான் அடுப்பிலிருந்து இறக்கியவை போன்ற அத்தனை சூட்டுடன் கமகமவென்று வாசனை வீசிக் கொண்டிருந்தன. ஆனால் மனித சஞ்சாரமே இல்லை.

மூவரும் வயிறார உண்டார்கள். பிரயாணக் களைப்பு நீங்கியதும் மூவரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள். ஒவ்வொரு நாளும் மூவரில் ஒருவர் கோட்டையில் தங்க வேண்டியது. மற்ற இருவரும் இளவரசியைத் தேடி அலைய வேண்டியது. அடுத்த நாள் அடுத்தவன் கோட்டையில் தங்க மற்ற இருவரும் வெளியே போக வேண்டியது என்று ஏற்பாடு செய்து கொண்டார்கள். அதன்படி மூத்தவன் மறுநாள் கோட்டையில் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான். நண்பகல் வேளையில் ஒரு குள்ளன் கோட்டைக்கு வந்தான். அவனிடம் பக்குவப்படுத்தப்பட்ட மான் இறைச்சி இருந்தது. அதைத் தன்னிடமுள்ள கத்தியினால் துண்டம் போட்டு மூத்த வேடனுக்கு அளித்தான். அப்போது ஒரு துண்டு இறைச்சி கீழே விழுந்து விட்டது. அதை எடுக்கும்படி குள்ளன் கேட்டுக் கொண்டான், வேட்டைக்காரனை.

''நீ கீழே போட்டதை நீயே எடுத்துக் கொள்'' என்றான் அலட்சியமாக. அது மட்டுமல்ல, குள்ளன் குனிந்து அதை எடுக்கும்போது அவனைக் காலால் எட்டி உதைத்து, ''வேலைக்காரன் யார், எஜமானன் யார் என்பதை இந்த உதை உனக்கு உணர்த்தும்'' என்று கொக்கரித்தான். குள்ளன் மௌனமாக வெளியேறினான்.

மறுநாள் இரண்டாவது சகோதரன் கோட்டையில் இருந்தான். அன்றும் குள்ளன் இறைச்சியோடு வந்து அவனுக்கு உபசரித்தான். ஒரு துண்டு கீழே விழுந்தது. அவனும் அகம்பாவத்துடன் குள்ளனை உதாசீனப்படுத்தி அனுப்பினான்.

மூன்றாம் நாள் கடைசிச் சகோதரன் கோட்டையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான். இறைச்சியோடு வந்த குள்ளன் கையிலிருந்து ஒரு துண்டு



நழுவியது. அதை எடுத்துத் தரும்படி கேட்டான் குள்ளன்.

''எங்களுக்கு உண்ண உணவும் தங்க இடமும் கொடுத்துப் பணி புரியும் உனக்கு இந்த உதவிகூடவா செய்ய மாட்டேன்? மகிழ்ச்சியோடு எடுத்துத் தருகிறேன்'' என்று குனிந்து இறைச் சித் துண்டை எடுத்துக் கொடுத்தான். இதனால் மகிழ்ச்சி அடைந்த குள்ளன் அவனுக்கு இதுவரையில் யாருக்குமே அளிக்காத தரமான உணவு அளித்தான். ''நீ எனக்கு உதவினாய். நானும் உனக்கு உதவப் போகிறேன், அரச குமாரிகளைக் கண்டுபிடிக்க. பாதாள உலகில் வாழும் மனிதன் நான். என்னைப் போன்ற குள்ளர்கள் பூமிக்கடி யில் ஏராளமாக இருக்கிறார்கள். உன் சகோதரர்கள் உன்னை ஏமாற்றப் பார்ப்பார்கள். ஆகவே அரசகுமாரி களைக் காண நீ மட்டும் தனியாகச் செல்ல வேண்டும். இந்தக் கோட் டைக்கு இரண்டு கல் தொலைவில் ஒரு மலை இருக்கிறது. அதன் உச்சியில் ஒரு கிணறு உண்டு. அதற்குள் ஒரு கூடை மூலமாக இறங்கினால் கிணற்றின் கீழே ஒரு விசாலமான இடம் தெரியும். அங்குதான் அரசகுமாரிகள் இருக் கிறார்கள். அங்கு மூன்று அறைகள் இருக்கும். ஒவ்வோர் அறையிலும் ஒரு ராஜகுமாரி சிறை வைக்கப்பட்டிருக் கிறாள். ஒவ்வோர் அறையையும் 'டிராகன்' என்ற கொடிய மிருகம் காவல் காத்துக் கொண்டிருக்கும். போகும்போது உன் உடைவாளை மறக் காமல் கொண்டு போ. அந்த ராட்சத மிருகத்தின் தலையை வெட்டினால்தான் அவை சாகும். வேறு எவ்வகையிலும் அவைகளை மாய்க்க முடியாது.'' — இவ் வளவையும் கூறிவிட்டுக் குள்ளன் மறைந்து போனான்.

**அ**ன்று மாலை கோட்டைக்குத் திரும்பிய அண்ணன்மார் இருவரும் அன்று பகல் பொழுதை எப்படிக் கழித்தாய் என்று தம்பியிடம் கேட் டார்கள். தம்பி நடந்ததையெல்லாம் கூறினான். அண்ணன்களுக்கு அதில் நம்பிக்கை இல்லாவிட்டாலும் அந்தக் கிணற்றையும் பார்த்து விடலாமே என்று முடிவு செய்தார்கள். மறு நாள் காலை மூன்று சகோதரர்களும் மலை உச்சிக்குப் போனார்கள். முதலில் கிணற்றுக்குள் யார் இறங்குவது என்று சீட்டுக் குலுக்கிப் போட்டார்கள். முதலில் மூத்தவனும் அடுத்து இரண் டாமவனும் கடைசியாக மூன்றாமவனும் இறங்க வேண்டும் என்று சீட்டு விழுந் தது. கையோடு உறுதியான கயிறும் கூடையும் கொண்டு போயிருந்தார்கள். கூடைக்குள் ஒருவர் அமர மற்ற இரு வரும் அதைக் கிணற்றினுள் இறக்கி னார்கள். மேலே வர வேண்டுமானால் அதை அறிவிக்கக் கிணற்றுக்குள் போகி றவன் தன்னுடன் ஒரு மணியைக் கொண்டு போனான். அதை அசைத்து ஒலித்தால் உடனே மேலுள்ளவர்கள் கூடையை மேலே இழுத்து விடுவார்கள்.

மூத்தவன் கிணற்றின் கீழே போன தும் அங்குள்ள ராட்சத மிருகத்தைக் கண்டானோ இல்லையோ, மணியைப் பல மாக அடித்தான். உடனே தம்பிகள் இருவரும் கூடையை மேலே இழுத்து விட்டார்கள். மூச்சு வாங்க, வியர்த்து விறுவிறுக்க மேலே வந்த அவன் உடல் பயத்தினால் நடுங்கிக் கொண்டிருந்தது. இரண்டாமவனும் இதே மாதிரி அலறி அடித்துக் கொண்டு உடனே மேலே வந்துவிட்டான். கடைசியாக மூன்றாமவ னின் முறை வந்தது. கிணற்றின் கடைசி வரையில் தன்னை இறக்கும்படி சொல்லி விட்டுக் கூடைக்குள் அமர்ந் தான் அவன். கூடை தரையில் போய் இறங்கியதும் கூடையிலிருந்து கீழே குதித்தான். முதல் அறையை நோக்கித் தைரியத்துடன் கையில் கத்தி ஏந்தி முன்னேறினான். அறையினுள்ளே குறட்டை ஒலி கேட்டது. ஓசைப்படுத் தாமல் கதவைத் திறந்தான். அங்கு ஓர் அழகிய பெண் உட்கார்ந்திருந்தாள். அவள் அரசகுமாரியாகத்தான் இருக்க வேண்டும். அவள் மடியில் தனது தலையை வைத்தபடி தூங்கிக் கொண் டிருந்தது அந்தக் கொடிய மிருகம். மூன்றாவது வேட்டைக்காரன் தாமதிக்க வில்லை. டிராகனின் தலையை ஒரே வீச்சில் சீவித் தள்ளினான். தனக்கு விடுதலை கிடைத்ததில் அந்த இளவர சிக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. அந்த வீரனுக்குத் தன் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைப் பரிசாகக் கொடுத்தாள்.

அடுத்த அறையில் ஒரு டிராகன் இள வரசியின் மடியில் தலை பதித்துத் தூங்கிக் கொண்டிருந்தது. அதையும் கொன்று அவளுக்கு விடுதலை அளித் தான். மூன்றாவது அரசகுமாரியின் மடியில் தூங்கிக் கொண்டிருந்தது இன் னொரு டிராகன். இரண்டு டிராகன்களைக் கொன்றவனுக்கு மூன்றாவது எம்மாத் திரம்? மூன்று ராஜகுமாரிகளையும் விடுதலை செய்துவிட்டான். ராஜ குமாரிகள் அந்த வாலிபனைக் கடவு ளுக்கும் மேலாக மதித்து வாழ்த்தி மகிழ்ந்து போனார்கள்.

மேலே வருவதற்கு அடையாளமாக மணியை ஒலித்தான். கூடை கீழே

வந்தது. ஒவ்வொரு ராஜகுமாரியாக அதில் ஏற்றி மூவரையும் மேலே அனுப்பினான். கடைசியில் தான் மேலே போக மணி ஓசை கொடுத்ததும் கூடை கீழே வந்தது. அப்போதுதான் குள்ளன் தன் அண்ணன்மார்களைப் பற்றி எச்சரித்தது நினைவுக்கு வந்தது குட்டித் தம்பிக்கு. ஆகவே கூடைக்குள் ஒரு பெரிய கல்லைத் தூக்கி வைத்துக் கயிற்றை ஆட்டி மேலே இழுக்கும்படி சமிக்ஞை செய்தான். கூடை மேலே உயர்ந்தது. பாதி வழி போனதும் மேலே இருந்த அண்ணன்மார்கள் இருவரும் கயிற்றைத் துண்டித்துவிட்டார்கள். இப்படி ஏதாவது நடக்கும் என்று அவன் எதிர்பார்த்தது நடந்தே விட்டது. கல்லுடன் கூடை பொதிரென்று கீழே விழுந்தது. ராஜகுமாரிகளுக்கு விடுதலை அளித்த தங்கள் தம்பியை ஒழித்து விட்டோம் என்று மகிழ்ச்சி அடைந்தார்கள் அண்ணன்மார்கள். தங்களை மீட்டது யார் என்ற உண்மையைக் கூறினால் அவர்களைக் கொன்று விடுவதாகப் பயமுறுத்திப் பணிய வைத்து அரண்மனையை நோக்கிப் பிரயாணமானார்கள் இளவரசிகளுடன் அவ்விருவரும்.

குள்ளனின் வார்த்தையைக் கேட்காமல் அண்ணன்மார்களுடன் வந்ததின் பலன், தான் அந்தப் பாழுங் கிணற்றில் பரிதாபமாகச் செத்து மடிய வேண்டியதுதான் என்று வேதனையுடன் சுற்று முற்றும் பார்த்தான். அப்போது சுவரிலுள்ள ஒரு மாடத்தில் ஒரு புல்லாங்குழல் இருப்பதைக் கண்டான். ''ஆமாம், இது இப்போது எதற்கு? இதை வாசித்தால் கேட்டு மகிழவோ, ஆனந்தப்பட்டு ஆடவோ இந்தப் பாழுங் கிணற்றில் யார் இருக்கிறார்கள்?'' என்று அலட்சியமாகக் கூண்டுப் புலியாக இங்கும் அங்கும் நடந்துகொண்டேயிருந்தான். தரைப் புழுதி பட்டுப் போலானதுதான் மிச்சம். ஒரு வழியும் ஏற்படவில்லை. அடிக்கடி புல்லாங்குழலின் நினைவு மட்டும் வந்து கொண்டிருந்தது. வெறுப்புடன் அதை எடுத்து மூன்று ஒலிகளை உண்டாக்கினான். அடுத்த விநாடியே மூன்று குள்ளர்கள் வந்து அவன் முன்னே குதித்தார்கள். வியப்படைந்த வேட்டைக்காரன் வேகமாகப் பலவித ஒலிகளை உண்டாக்கினான் தொடர்ந்து. ஒவ்வோர் ஒலிக்கும் ஒரு குள்ளன் வீதம் வந்து குழுமி விட்டார்கள். அத்தனை குள்ளர்களும் அவனுக்கு என்ன வேண்டும் என்று கேட்டார்கள்.

''நான் உடனே மேலே போக வேண்டும்'' என்றான் குட்டித் தம்பி. குள்ளர்கள் அவனுடைய தலை முடியை ஆளுக்குக் கொஞ்சமாகப் பிடித்துக் கொண்டு மேலே எழும்பினார்கள். அவர்களோடு அவனும் அந்தரத்தில் மிதக்கலானான். சில விநாடிகளில் குள்ளர்கள் அவனை மேலே கொண்டுவந்துவிட்டார்கள். குள்ளர்களுக்கு நன்றி தெரிவித்துவிட்டு அரண்மனையை நோக்கிக் கிளம்பினான். அவன் நகரத்துக்கு வந்தபோது நகரில் திருமணக் கோலாகலம் திருவிழாவாக அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. இளவரசிகளுக்கு நாளைக்குக் கல்யாணமாம்!

குட்டித் தம்பி அவசரம் அவசரமாக அரண்மனைக்குள் புகுந்தான். மன்னர், தம் மூன்று குமாரிகளுடன் உட்கார்ந்திருந்தார் ஓர் அறையில். திடீரென்று அங்கு நுழைந்த அவனைக் கண்ட மூன்று அரசகுமாரிகளும் மகிழ்ச்சியால் திக்குமுக்காடிப் போய் மூர்ச்சையானார்கள். அரசர் இதைத் தவறாகப் புரிந்து கொண்டு தம் பெண்களுக்குத் தீங்கு செய்ய வந்தவன் என்று எண்ணி அவனைச் சிறையில் அடைக்கும்படி உத்தரவிட்டார். ராஜகுமாரிகளுக்கு நினைவு திரும்பியதும், சிறையில் அடைத்திருக்கும் வாலிபனை விடுதலை செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள். காரணம் கேட்ட தந்தையிடம், ''உண்மையைச் சொல்வதில்லை என்று சத்தியம் செய்து கொடுத்திருக்கிறோம் அப்பா. அதைக் கூற முடியாது!'' என்று அழுதார்கள்.

இதில் ஏதோ சூது இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்ட மன்னர், ''என்னிடம் கூற வேண்டாம். இந்த அறையிலுள்ள குத்து விளக்கிடம் கூறுங்கள். விளக்கு நம் குலதெய்வம் இல்லையா?'' என்று கூறி அவர் அறையை விட்டு வெளியேறி அவர்கள் சொல்வதைக் கேட்கும்படியான ஓர் இடத்தில் மறைந்து கொண்டார். மூத்த இளவரசி நடந்தது நடந்தபடி விளக்குத் தேவதையிடம் கூறி முறையிட்டாள். மன்னருக்கும் உண்மை தெரிந்தது.

உடனே மணமகனாகப் போகும் மூத்த சகோதரர்கள் இருவரையும் கைது செய்து கைகளிலும் கால்களிலும் கனமான சங்கிலி மாட்டிப் பாதாளச் சிறைக்குள் தள்ளினார். அங்கு அனுப்பப்படுபவர் மறுபடியும் வெளி உலகைப் பார்ப்பதே கிடையாதாம். சிறைப்பட்டிருந்த இளையவனை வரவழைத்து அவனுக்குத் தம் கடைக்குட்டி ராஜகுமாரியை மனைவியாக்கி மகிழ்ந்தார் மன்னர்.



# கிரஹணக் கதை

கிரஹணம் என்றால் உங்களுக்கெல்லாம் தெரியும். சமீபத்தில்கூட சூரிய கிரஹணம் வந்ததில்லையா? துன்பம் என்ற பொருளில்தான் 'கிரஹணம்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம். சூரியனுக்கும் சந்திரனுக்கும் துன்பம் வருவதால்தானே கிரஹணம் ஏற்படுகிறது. அவர்கள் தங்கள் ஒளி இழந்து துன்பப்படுகிறார்கள். கிரஹணத்துக்கு ஒவ்வொரு நாட்டிலும் ஒரு கதை உண்டு. நம் நாட்டில் வழங்கும் கிரஹணக் கதை தான் உங்களுக்கெல்லாம் தெரியுமே. தாய்லாந்தில் வழங்கும் கதையைப் பாருங்கள்.


இரண்டு சகோதரிகள் — அதிட், சான் என்பது அவர்கள் பெயர். பணக்கார வீட்டுப் பெண்ணானதால் இவர்களுக்கு ஓர் அடிமைப் பெண் வேலைக்காரியாக இருந்தாள். நகரத்தை அடுத்த ஒரு கோவிலில் வருஷா வருஷம் ஒரு பெரிய திருவிழா நடக்கும். அதற்கு எல்லோரும் போய்க் கூடுவார்கள். நாள் முழுதும் பிரார்த்தனை நடக்கும். ஒரு சமயம் அதிட்டும் சானும் தங்கள் அடிமைப் பெண்ணுடன் இந்தத் திருவிழாவுக்குப் போனார்கள். கோவிலுக்குப் போனதும் தான் சகோதரிகளுக்கு உணவு உட்கொள்ளும் கிண்ணத்தையும் கரண்டியையும் எடுத்து வராதது நினைவுக்கு வந்தது. உடனே தங்கள் வேலைக்காரியான அடிமைப் பெண்ணை வீட்டுக்கு விரட்டினார்கள், அவைகளை எடுத்து வரும்படி. அந்தப் பெண்ணும் ஓடோடிப்போய் அவைகளைக் கொண்டு வந்தாள். ஆனால் பாவம், அவசரத்தில் கிண்ணங்களை மட்டுமே கொண்டு வந்தாள். கரண்டிகளைக் கொண்டுவர அவள் மறந்து போனாள். சீமாட்டிச் சகோதரிகளுக்குச் சீற்றமான சீற்றம். அவளைத் திட்டி "ஓடு, போய்க் கரண்டிகளைக் கொண்டு வா போ!" என்று விரட்டினார்கள். பாவம், அடிமைப் பெண்! அடியையும் பட்டுக் கொண்டு மறுபடியும் வீட்டுக்கு ஓடினாள், உணவுக் கரண்டிகளைக் கொண்டுவர.

இதற்குள் திருவிழாக் கூட்டம் அத்தனையும் கோவிலுக்குள் புகுந்துவிட்டது, சடங்குகளில் கலந்துகொள்ள. அதிட்டும் சானும் தவிப்புடன் தங்கள் அடிமைப் பெண்ணின் வருகைக்காகக் காத்திருந்தார்கள். அவளும் ஓடி வந்தாள். அவளுக்கு மூச்சு வாங்கியது. இரு தடவைகள் ஓடிப்போய் ஓடி வந்திருக்கிறாளே. அதிட் அவளிடமிருந்து தன் கரண்டியை வெடுக்கென்று பறித்துக் கொண்டு ஆத்திரத்துடன் அதனாலேயே அவள் தலையில் ஒரு போடு போட்டாள். சானும் தன் பங்குக்குத் தன் கரண்டியால் கன்னத்தில் ஒரு மொத்து மொத்தினாள். பிறகு இருவரும் கோவிலுக்குள் ஓடினார்கள்.

அத்தனைபேர் முன்னிலையிலும் தன்னை இப்படி அடித்து அவமானப்படுத்தியதை எண்ணி அந்த அடிமைப் பெண் மனத்துக்குள் அழுதாள். ஆனால் ஆண்டவனிடம் வேண்டிக் கொண்டாள் இப்படி: 'அடுத்த ஜன்மத்திலாவது இந்தக் கர்வம் பிடித்த சகோதரிகளை நான், பலர் முன்னிலையில் இதேபோல் அவமானப்படுத்திப் பழி வாங்க அருள வேண்டும்'. அந்த அப்பாவி அடிமைப் பெண்ணின் பிரார்த்தனையை ஆண்டவன் ஏற்றுக் கொண்டு நிறைவேற்றி விட்டார். அதிட், சான், அடிமைப் பெண் மூவரும் இறந்த பிறகு மறுபிறவி எடுத்தார்கள். அதிட் சூரியனாகவும் சான் சந்திரனாகவும் பிறந்தார்கள். அடிமைப் பெண் ராகுவாகப் பிறந்தாள். ராகு சூரியனையும் சந்திரனையும் எப்போதும் துரத்திக் கொண்டேயிருக்கிறது. இருவரில் யார் அவளிடம் அகப்பட்டாலும் ஆத்திரம் தீர ஓர் அடி கொடுக்கிறாள் முகத்தைப் பார்த்து. அடி குறி தவறாமல் சரியாக விழுமானால் பூரண கிரஹணம் ஏற்படுகிறது. அடி குறி தவறுமானால் ஒரு பகுதி மட்டும் கிரஹணம் ஏற்படுகிறது. எப்படியானால் என்ன? அடிமைப் பெண்ணின் வேண்டுகோள் நிறைவேறிவிட்டதல்லவா?



## 1. ஒன்பது காய்களில் ஒரு கணக்கு



கிருஷ்ண தேவராயரும் தெனாலி ராமனும் ஒரு நாள் ஓய்வாகக் கட்டான் விளையாடிக் கொண்டிருந்தார்கள். கொஞ்ச நேரம் விளையாடிய பிறகு ராயருக்கு ஏனோ விளையாட்டில் மனம் லயிக்கவில்லை. 'ராமா, இங்குள்ள காய்களில் ஒன்பதை இந்தக் கட்டங்களில் கட்டத்துக்கு ஒன்றாக வைக்க வேண்டும். மேலிருந்து கீழாகவோ இடமிருந்து வலமாகவோ குறுக்கு நெடுக்காகவோ எப்படிப் பார்த்தாலும் ஒரு வரிசையில் ஒரு காய்தான் இருக்கலாம். உன்னால் முடியுமா?'' என்று கேட்டார். தெனாலி ராமன் பலே ஆளாயிற்றே! 'என்னால் முடியாது பிரபோ! எனக்கு அத்தனை திறமை யிருந்தால் இப்படி எல்லாரும் என்னைக் கண்டு சிரிக்கும்படி வாழ்வேனா?' என்றான். ராயருக்குத் தெனாலிராமன் தன் இயலாமையை ஒப்புக் கொண்டதில் ஒரு பெருமை. இதோ பார் என்று ஒன்பது காய்களை அவர் குறிப்பிட்டபடியே அமைத்துக் காட்டினார். (அதுதான் மேலே இருக்கும் படம்) உடனே ராமன், ''அரசே! இதில் மூன்று காய்களை மட்டும் அதன் பக்கத்து வீட்டுக் கட்டங்களுக்கு இடம் மாற்றுவதன் மூலம் ஒரு வரிசைக்கு ஒன்று மட்டுமே இருக்கும்படி மாற்றி அமைக்க முடியுமா?'' என்று கேட்டான். ''பக்கத்து வீட்டுக் கட்டம் என்றால் அந்த வரிசையின் வலமோ இடமோ உள்ள கட்டங்கள்'' என்று விளக்கமும் கொடுத்தான். ராயர் தம் திறமையைக் காட்ட ஒரு கணக்குப் போட ராமன் இப்படி அவரை மடக்கி விட்டான். அவரால் முடியாததை ராமன் எப்படி விளக்கியிருப்பான் என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா?

## 2. ரத்தினக் கம்பளத்தைப் பங்கு போட்டது

அன்று கிருஷ்ணதேவ ராயர் அவைக்கு வழக்கொன்று வந்தது. ஒரு வேலைப்பாடமைந்த ரத்தினக் கம்பளத்தை மூன்று பேர் கொண்டு வந்திருந்தார்கள். அது அவர்களுடைய குடும்பத்தில் பல தலைமுறைகளாக இருக்கிறதாம். இப்போது மூவரும் தனித் தனியே பிரிந்து வாழ்வதால் ஒவ்வொருவரிடமும் கம்பளத்தின் ஒரு பகுதி இருக்க வேண்டுமென்று விரும்பினார்கள். அந்தச் சதுரக் கம்பளத்தை மூன்று துண்டாக்கி ஆளுக்கொரு துண்டாக எடுத்துக் கொள்ள வேண்டும். மூத்தவன் சொன்னான்: ''எனக்கு ஒரு சின்னச் சதுரக் கம்பளம் கொடுத்தால் போதும். நீங்கள் இருவரும் பெரிய துண்டுகளாக எடுத்துக் கொள்ளுங்கள். அப்போதுதான் இந்தக் கம்பளம் அதிக வெட்டுக்களுக்கு உட்படாமல் இருக்கும்'' என்றான். ''மூத்தவன் குறிப்பிட்டபடி பங்குபோடப் பெரிய கம்பளத்தை நான்கே துண்டுகள் போட்டால் போதும். அதுவும் மூன்று விதமாகப் போடலாம்'' என்றார் ராயர். அது எப்படி மூன்று விதம்? ராயர் விளக்க வேண்டாம். நீங்கள் விளக்குங்கள் பார்க்கலாம். நிற்க,

மூத்தவனின் யோசனையை மற்றவர்கள் ஏற்கவில்லை. மூவருக்குமே சமமான சதுரங்கள்தான் வேண்டும் என்றார்கள். எப்படி முடியும் என்று ராயர் விழித்தார்: ''கவலைப்படாதீர்கள். நான் பங்கு போட்டுத் தருகிறேன்'' என்று ராமன் அந்த ரத்தினக் கம்பளத்தை ஆறு துண்டுகளாக்கினான். பிறகு குறிப்பிட்ட சில துண்டுகளைச் சேர்த்து மூன்று சரி சமமான சதுரக் கம்பளங்களாக்கி அவர்களுக்குக் கொடுத்து வழக்கை முடித்து வைத்தான். ராமனின் வெட்டுக்கள் எப்படி என்று காட்டுங்கள், பார்க்கலாம்

— இட்டு



விடை : 28-ம் பக்கம் பார்க்கவும்.

தோன்றியது எப்படி ?

# மாயக் கண்

— கிருஷ்ணவேணி —





**வா**னத்தில் ஒளி வீசும் நட்சத்திரங்களையும் கிரகங்களையும் நம்முடைய சாதாரணக் கண்களால் காணவோ, ஆராயவோ முடியுமா? வெகு தூரத்திலுள்ள அவைகளை நம் கண்களால் காண முடியாதே. ஆனால் அவைகளை நம் பார்வையின் மிகச் சமீபத்துக்குக் கொண்டு வர ஒரு சாதனம் இன்றைக்கு இருக்கிறது. அதுதான் டெலஸ்கோப் — **தூர தரிசினி** — தொலை நோக்கி. ஆனால் டெலஸ்கோப் கருவி கண்டுபிடிக்குமுன் மனிதன் விண்வெளியை எப்படி ஆராய்ந்தான்? டெலஸ்கோப் கருவி யாரால் கண்டுபிடிக்கப்பட்டது? இவைகளுக்கான விடை சுவையான கதை போல் இருக்கும்.

பதினேழாம் நூற்றாண்டுக்கு முன்பு வரை மனிதன் விண்வெளியை ஆராய ஏதேதோ சாதனங்களைத்தான் பயன்படுத்தி வந்தான். டெலஸ்கோப் கண்டுபிடிக்கப்பட்டதும் மனிதனுக்கு ஒரு மாயக் கண் கிடைத்தது போலாயிற்று. டெலஸ்கோப் உருவானதன் கதையைச் சொல்வதற்கு முன்னால் கண்ணாடி கண்டுபிடிக்கப்பட்ட கதையைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

கண்ணாடியை முதன் முதலில் கண்டுபிடித்த பெருமை பொனீஷியர்களையே சேரும். மத்தியதரைக் கடல் ஓரமாக வசித்த சரித்திர காலத்துக்கு முற்பட்ட இனத்தவர் இந்தப் பொனீஷியர்கள். கி. மு. 3500ல் வாழ்ந்தவர்கள் என்று சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இவர்கள் கண்ணாடியைக் கண்டதும்கூடத் தற்செயலாகத்தான். ஒரு சமயம் சில பொனீஷிய வர்த்தகர்கள் ஒரு கடற்கரையில் இறங்கினார்கள். குளிர்ந்த கடற்காற்று ஊசிமுனைகளாகக் குத்தின. கப்பல் தலைவனுக்குக் கதகதப்பும் சூடான உணவும் தேவையாக இருந்தன. கடற்கரை மணலில் கணப்பு மூட்டி உணவு தயாரிக்க உத்தரவிட்டான். ஆனால் அடுப்பு அமைக்க அங்கு கற்கள் ஏதும் கிடைக்கவில்லை. ''கப்பலில் பெரிய பெரிய நேட்ரான் கட்டிகள் இருக்கின்றன. அவைகளைக் கொண்டு வந்து அடுப்புக் கல்லாகப் பயன்படுத்திச் சமையலைத் துரிதமாகச் செய்'' என்று யோசனை கூறினான் கப்பல் தலைவன். நேட்ரான் என்பது நாம் சமையலுக்குப் பயன்படுத்துகிறோமே உப்பு, பேக்கிங் சோடா இவைகளைப் போன்ற ஒரு தாதுப் பொருள். தலைவனின் உத்தரவுப்படி அந்த நேட்ரான் உப்புக் கட்டிகளை அடுப்புக் கல்லாக்கித் தீமூட்டிச் சமைக்கத் தொடங்கினார்கள் மாலுமிகள். அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. நேட்ரான் கட்டி உருகலாயிற்று. அது மணலோடு கலந்து ஒளி ஊடுருவக் கூடிய ஒரு புதிய பொருளாக மாறியது. பொனீஷியர்களுக்கு வியப்பான வியப்பு. நேட்ரானும் மணலும் கலந்த கலவை குளிர்ந்ததும் அது இன்றைய கண்ணாடியாகியது. தற்செயலாக நிகழ்ந்த இந்த நிகழ்ச்சி உலகுக்கு ஒரு புதிய பொருளை அளித்து விட்டது. அது









முதல் பொனீஷியர்கள் கண்ணாடியால் ஜாடிகள், கிண்ணங்கள், குடுவைகளைச் செய்து மத்தியதரைக் கடல் ஓர வாசிகளுக்கு விற்கலானார்கள். கண்ணாடியினால் பல்வேறு பொருள்களை உருவாக்க மனிதன் முற்பட்டான். கண்ணாடியின் உபயோகம் வளரலாயிற்று.

கி. மு. 500ம் ஆண்டுவாக்கில் கிரேக்கர்கள் மிக எளிய லென்ஸ்களை உருவாக்கினார்கள். லென்ஸ் என்றால் என்ன? ஒளி ஊடுருவக்கூடிய ஒரு பொருளில் குறைந்தபட்சம் அதன் ஒரு பக்கமாவது வளைவான மேற்பரப்பைக் கொண்டதாக இருக்க வேண்டும். இதுவே, லென்ஸ் எனப்படும். கிரேக்கர்களின் ஆதி லென்ஸ் இன்று நீங்கள் காணுவது போன்று இருக்கவில்லை. ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் நீரை நிரப்புவார்கள். அந்தப் பாத்திரத்தைச் சூரிய ஒளிக்கு நேரே பிடிப்பார்கள். சூரியனின் கதிர்கள் நீர் நிறைந்த கண்ணாடிப் பாத்திரத்தின் ஒரு பக்கத்து வழியாகப் பாய்ந்து மறு பக்கத்தில் ஒரு புள்ளியில் ஒன்று சேர்ந்து விழும். இதற்கு **ஃபோகஸ்** என்று பெயரிட்டார்கள். ஒளி கூடும் இந்த ஃபோகஸ் புள்ளி இடத்தில் காய்ந்த சருகு, மரம், கம்பளி ஆகியவைகளை வைத்தால் அவை தீப்பிடித்துக் கொண்டன. கிரேக்கர்களிடம் முகம் பார்க்கும் கண்ணாடிகளும் இருந்தன. இவை பளபளப்பாக்கப்பட்ட உலோகத்தினால் ஆக்கப்பட்டிருந்தாலும் இதில் ஒளி பட்டால் அவை பிரதிபலிக்குமல்லவா? இத்தகைய கண்ணாடிகளை உட்குழி உள்ளவைகளாகச் செய்து அதில் சூரிய ஒளியை விழச் செய்து பிரதிபலிக்கும் அதன் கதிர்களை ஓர் இடத்தில் கூடும்படி ஃபோகஸ் செய்து பொருள்களுக்குத் தீமூட்டினார்கள்.

தீப்பிடிக்கச் செய்யும் கண்ணாடி சாதனத்தைக் கொண்டே பொருள்களைப் பெரிதாகக் காணும் வித்தையையும் கிரேக்கர்கள் அறிந்திருந்தார்கள். நீர் நிறைந்த கண்ணாடிப் பாத்திரத்துக்கும் ஃபோக்கஸ் புள்ளிக்கும் இடையே ஒரு பொருளை வைத்து மறு பக்கத்திலிருந்து பார்த்தால் அதன் பிரதிபிம்பம் பெரிதாக்கப்பட்டுத் தோன்றுவதைக் கண்டார்கள். ஓர் உட்குழி லென்ஸின் ஒளிப் பாதைக்கும் ஃபோகஸுக்கும் இடையில் ஒரு பொருளை வைத்தால் அதன் பிரதிபிம்பம் மிகப் பெரிதாகக் கண்ணாடியின் மறு பக்கத்தில் தெரிவதையும் கண்டார்கள்.

உட்குழிவான கண்ணாடி என்பது கற்பனையான ஒரு கோளத்தின் உட்புறத்தின் ஒரு பகுதி. இந்தக் கற்பனைப் பகுதியின் நடு மையத்தை ஒளி வளைவின் மையம் — **'ஸெண்டர் ஆஃப் கர்வசர்'** — என்கிறோம். ஒரு பொருளை இந்த வளைவின் மையத்துக்கும் ஃபோகஸுக்கும் இடையில் வைத்தோமானால் அதன் பிரதிபிம்பம் தலைகீழாகவும் மிகப் பெரிதாகவும் கண்ணாடியின் முன்னால் தெரியும்.

இவ்வளவெல்லாம் அறிந்திருந்தும் கிரேக்கர்கள் எரிக்கும் கண்ணாடியான இந்த லென்ஸ்களைப் பொருள்களைப் பெரிதாக்கிக் காணும் செயலுக்கு ஏனோ பயன்படுத்தவில்லை. பதின்மூன்றாம் நூற்றாண்டு வரையில் பொருள்களைப் பெரி



தாக்கிக் காண லென்ஸ்களை யாரும் பயன்படுத்தவில்லை. ரோகர் பேகன் என்ற ஆங்கிலப் பாதிரியார்தான் கண்ணாடிக் கோளத்தின் ஒரு பாதியைக் கொண்டு மிகச் சிறிய எழுத்துக்களைப் பெரிதாக்கிப் படிக்கும் பழக்கத்தை மேற் கொண்டார். லென்ஸ்களுக்கு வருங்காலத்தில் மகத்தான பணி காத்திருக்கிறது என்பதையும் உறுதிப்படுத்தியவர் அவர்தான். ''வெகு தூரத்திலுள்ள மிகச் சிறிய எழுத்துக்களையும் நம்மால் படிக்க முடியும். சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் இவைகளைக் கூட நம் அருகில் கொண்டுவரக் கூடும் இந்த லென்ஸ்களினால்'' என்றார் ரோகர் பேகன். அது எத்தனை உண்மை என்பதை இன்று நாம் காண்கிறோம்.

டெலஸ்கோப்பின் தோற்றத்துக்கு முன்னோடியாக விளங்கியது மூக்குக் கண்ணாடி. மூக்கின் மீது அணியும் கண்ணாடிகள் எப்போது தோன்றின என்பதற்குத் தகுந்த ஆதாரம் இல்லை. ஆனால் கி. மு. 500லேயே சீனர்கள் மூக்குக் கண்ணாடி அணிந்திருந்ததாகத் தெரிகிறது. கி. பி. 1275ல் சீனாவில் பிரயாணம் செய்த மார்கோ போலோ என்ற புகழ்பெற்ற யாத்திரிகர் கண்ணாடி அணிந்த பல சீனர்களைக் கண்டதாக எழுதியிருக்கிறார். கி. பி. 1275க்கும் பதின்மூன்றும் நூற்றாண்டின் இறுதிக்கும் இடைப்பட்ட காலத்தில் ஐரோப்பாவிலும் கண் கண்ணாடிகளின் புழக்கம் ஏற்பட்டது. பதினாறும் நூற்றாண்டில் நெதர்லாந்தும் ஜெர்மனியும் கண் கண்ணாடிகளைத் தயாரிக்கும் கேந்திரங்களாக விளங்கின. கண் கண்ணாடிகளை விற்பனை செய்யும் வியாபாரிகள் தெருக்களில் திரிந்தார்கள்.

1608ம் ஆண்டு நெதர்லாந்தின் கவர்னருக்குப் புதிய கண்டுபிடிப்புக்களுக்கு, உரிமைப் பதிவு கோரி ஒரு மனு வந்தது. அதை அனுப்பியிருந்தது ஹான்ஸ் லிப்பர்ஸே என்பவர். அவர் மூக்குக் கண்ணாடி தயாரிப்பாளர். அவர் கண்டுபிடித்திருந்தது வெகு தூரத்திலுள்ள பொருள்களை மிக அருகில் கொண்டு வந்து நிறுத்தும் ஒரு கருவி. ஆமாம்! லிப்பர்ஸே டெலஸ்கோப்பைத்தான் கண்டுபிடித்திருந்தார்! அதில் இரண்டு லென்ஸ்கள் இருந்தன. கிரேக்கர்கள் எரியூட்டப் பயன்படுத்திய கண்ணாடி ஜாடிகளின் தத்துவப்படியே லிப்பர்ஸே இதை அமைத்திருந்தார். இவர் மனுக் கொடுத்த சில நாட்களுக்கெல்லாம் மூக்குக் கண்ணாடி செய்யும் வேறு இரண்டு டச்சுக்காரர்கள் இந்தக் கண்டுபிடிப்புக்குத் தாங்களே உரிமையாளர்கள் என்று கூறி மனுக் கொடுத்தார்கள். ஆகவே டெலஸ்கோப் கண்டுபிடிப்புக்கான உரிமை யாருக்கும் வழங்கப்படவில்லை. ஆனால் டெலஸ்கோப் என்ற சாதனம் பற்றிய செய்தி நெதர்லாந்துக்கு வெளியே வேகமாகப் பரவலாயிற்று. 1609ம் ஆண்டுவாக்கில் பாரீஸ் நகரில் டெலஸ்கோப் கருவிகள் விற்பனைக்கு வந்து விட்டன. ஜாக்குவிஸ் பெதோவர் என்பவர் விற்பனைக்கு வந்துள்ள அக் கருவியைக் கண்டார். அவர் பிரபல விஞ்ஞானியான காலிலியோவின் நண்பர். ''என் நண்பருக்கு இக் கருவி உபயோகமாக இருக்கும். ஒளியைப் பற்றி ஆராய உதவியாக இருக்கும். இதன் அமைப்பைப் பற்றி அவருக்கு என் கடிதத்தில் குறிப்பிட்டு எழுதுகிறேன்'' என்ற பெதோவர் அப்படியே செய்தார். அப்போது கலிலியோ இத்தாலியில் உள்ள பதுவா சர்வகலாசாலையில் கணிதப் பேராசிரியராக இருந்தார். பெதோவரின் கடிதத்தைப் படித்த கலிலியோ பல டெலஸ்கோப் கருவிகளை உருவாக்கினார். அந்தக் காலத்து மற்ற டெலஸ்கோப்புக்களின் லென்ஸ்களைவிட கலிலியோ உருவாக்கிய டெலஸ்கோப்புக் கருவிகளின் லென்ஸ்கள் மிகச் சக்தி வாய்ந்தவைகளாக இருந்தன. கலிலியோ தமது டெலஸ்கோப்புகளை விண்வெளியை நோக்கித் திருப்பினார். கிரகங்களை ஆராய மனிதன் ஒரு மாயக் கண்ணை உருவாக்கி விட்டான்!









# நீதிபதியின் தீர்ப்பு!

— மைதிலி பாலு —


நல்லூர் என்ற கிராமத்தில் குப்பன் சுப்பன் என்ற இருவர் வசித்து வந்தனர். இரண்டு பேரும் நெருங்கிய நண்பர்கள். மேலும் அவர்களுடைய வீடு இரண்டும் பக்கம் பக்கமாக இருந்தது. குப்பனின் வீட்டில் கிணறு இருந்தது. சுப்பனும் தனக்கு வேண்டிய தண்ணீரைக் குப்பனின் கிணற்றிலேயே எடுத்துக் கொண்டான். ஒரு நாள் என்ன காரணத்தினாலோ குப்பனின் மனம் மாறிவிட்டது. அவன் சுப்பனைக் கூப்பிட்டு, ''சுப்பா! இனி மேல் நீ என் கிணற்றில் தண்ணீர் எடுக்கக் கூடாது'' என்று தடை போட்டுவிட்டான். பாவம்! அப்பாவிச் சுப்பனும் ஏன் என்று கேட்கவில்லை. ஆனால் மனத்துக்குள்ளே மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டான். கோடை காலம். இனி தண்ணீருக்கு ஒரு மைல் தூரம் போக வேண்டுமே! இந்த வேகாத வெய்யிலில் 'நம்மை இப்படித் தண்ணீர் எடுக்க வேண்டாம் என்று குப்பன் கூறிவிட்டானே!' என்று தனக்குத் தானே புலம்பிக் கொண்டிருந்தான். திடீரென்று அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. நேராகக் குப்பனிடம் சென்று ''குப்பா, உன் கிணற்றை எனக்கு விற்றுவிடுகிறாயா?'' என்று கேட்டான். குப்பனுக்கு ஒரே சந்தோஷம். ''ஓ! நான் தயார்!'' என்றான். உடனே சுப்பன் நானூறு ரூபாய் கொடுத்துக் குப்பனின் கிணற்றை விலைக்கு வாங்கிக் கொண்டான். 'நாம் தண்ணீர் எடுக்கக் கூடாது என்று கூறியவுடன் சுப்பன் பயந்து போய் நானூறு ரூபாய் கொடுத்துக் கிணற்றையே வாங்கிக் கொண்டான். 'பணத்துக்குப் பணம். நானும் என் இஷ்டம் போல் தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம்' என்று குப்பன் நினைத்து மகிழ்ந்தான். ஆனால் அவன் நினைப்பில் சுப்பன் மண்ணைப் போட்டான். அவன் குப்பனைக் கூப்பிட்டு, ''டேய், குப்பா.... நான் நானூறு ரூபாய் கொடுத்துக் கிணற்றை வாங்கியுள்ளேன். இப்போது கிணறு எனக்குச் சொந்தம். நாளையிலிருந்து நீ என் கிணற்றில் தண்ணீர் எடுக்கக் கூடாது'' என்று உத்தரவு போட்டான்.

குப்பனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. நம் வீட்டுக் கிணற்றை வேறு ஒருவனுக்கு விற்றுவிட்டு இப்போது நாமே தண்ணீருக்கு வேறு பக்கம் போனால் பார்ப்பவர்கள் சிரிப்பார்களே! என்ன செய்வது என்று தெரியாமல் அவ்வூர் நீதிபதியிடம் சென்று முறையிட்டான். உடனே

நீதிபதியும் ''குப்பா, கவலைப்படாதே! நீ கிணற்றை மட்டும்தானே சுப்பனுக்கு விற்றாய். ஆகையால் கிணறு மட்டும் தான் அவனுக்குச் சொந்தம். ஆகவே, நீ அதில் தண்ணீர் எடுக்கலாம்'' என்று கூறினார். குப்பனுக்கு மிகவும் மகிழ்ச்சியாகப் போய்விட்டது. நேரே சுப்பனிடம் போய், ''சுப்பா, உனக்குக் கிணற்றை மட்டும்தான் விற்றேனே ஒழியத் தண்ணீரை விற்கவில்லை. தண்ணீர் எனக்குச் சொந்தம். எனவே, இனி மேல் நீதான் தண்ணீர் எடுக்கக் கூடாது'' என்று நீதிபதி கூறியதை அவனிடம் கூறினான்.

சுப்பனின் நிலைமை பரிதாபகரமாக இருந்தது. 'பணத்துக்குப் பணமும் போய், தண்ணீரும் எடுக்க முடியாத நிலையாகி விட்டதே! நாம் ஏமாந்த சோணகிரியாகப் போய்விட்டோமே, நம்மைக் குப்பன் நன்றாக ஏமாற்றிவிட்டான்' என்று அழுது கொண்டே நீதிபதியிடம் சென்று முறையிட்டான். நீதிபதி சிறிது நேரம் யோசித்துவிட்டு, ''சுப்பா..... கிணறு உனக்குச் சொந்தம். ஆகவே குப்பன் தன் தண்ணீரை உன் கிணற்றில் வைத்திருக்கக் கூடாது. உடனடியாகப் பூராத் தண்ணீரையும் இறைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் உன் கிணற்றில் அவனுடைய தண்ணீரை வைத்திருப்பதற்காக அவன் தினமும் ஐந்து ரூபாய் கிணற்றுக்கு வாடகை தர வேண்டும். இதுதான் நியாயம்'' என்றார். உடனே சுப்பன் குதித்துக் கொண்டே போய்க் குப்பன் எதிரில் நின்றான். நீதிபதி கூறியதை அவனிடம் கூறி, ''உடனடியாகத் தண்ணீர் முழுதும் இறைத்துக் கொள். இல்லாவிட்டால் தினமும் ஐந்து ரூபாய் வாடகை தர வேண்டும்'' என்றான். குப்பனுக்கு இப்போதுதான் தான் செய்த தவறு புரிந்தது. 'அநியாயமாகச் சுப்பனைத் தண்ணீர் எடுக்க வேண்டாம் என்றோமே. அவனிடம் பணம் வேறு நானூறை வாங்கிக் கொண்டோமே. என் பேராசையின் பலன் எனக்கே நஷ்டமாக வந்துவிட்டதே!' என்று எண்ணி, எண்ணி வருத்தப்பட்டான். சுப்பனையும் அழைத்துக்கொண்டு நேரே நீதிபதியின் முன் சென்று, ''ஐயா! நான் தெரியாமல் என் நண்பனிடம் இது மாதிரித் தவறாக நடந்து கொண்டேன். மன்னித்து விடுங்கள். இனிப் பழையபடியே நண்பர்களாக இருந்து விடுகிறோம். நான் வாங்கிய நானூறு ரூபாயையும் சுப்பனுக்கே திருப்பித் தந்துவிடுகிறேன். இனி மேல் அந்தக் கிணறு எங்கள் இருவருக்குமே சொந்தம்!'' என்று கண்களில் கண்ணீர் பெருகக் கூறினான். உடனே சுப்பனும், 'குப்பா! நடந்ததை மறந்துவிடு. இனி மேல் நம் நட்பை யாராலும் பிரிக்க முடியாது!' என்று கூறிக் கட்டித் தழுவிக் கொண்டான். நீதிபதியும், ''நீங்கள் இருவரும் பழையபடி நண்பர்களாக மாறவே, நான் இப்படித் தீர்ப்புக் கூறினேன். பகைமையை வளர்க்க ஒரு நிமிடம் போதும். ஆனால் நல்ல நட்பு வளரப் பல வருடங்கள் ஆகும். பகைமையை மறந்து பழையபடியே அன்பாக இருங்கள்'' என்று கூறி அவர்களை அனுப்பி வைத்தார். இப்போதும் குப்பனும் சுப்பனும் நெருங்கிய நண்பர்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

## மூளைக்கு வேலை — விடைகள்




### ஒன்பது காய்கள் கணக்கு விடை:


ராமன் மாற்றி வைத்த மூன்று காய்களின் அமைப்பைக் குறிக்கும் 'படம்தான் இது. முதலில் இருந்த காய்களின் இடத்தைப் புள்ளிகள் குறிக்கின்றன. அதனதன் வரிசையில் ராமன் மூன்று காய்களையும் நகர்த்தி இருக்கிறான் பாருங்கள்.

### ரத்தினக் கம்பளம் விடை:


அ. மூத்தவன் விருப்பப்படி ராயர் தெரிவித்த மூன்று வெட்டுக்களில் மூன்று துண்டு மூன்று விதமாக. ஒவ்வொரு முறையிலும் A, A என்று குறிப்பிட்ட துண்டுகள் ஒன்று சேர்ந்து ஒரு சதுரமாகும்.

ஆ. ராமன் துண்டாடிய முறை. 1. முழுச் சதுரம். 4ம் 5ம் சேர்ந்து ஒரு சதுரமாகும். 2, 3, 6 எண்ணுள்ள துண்டுகள் சேர்ந்து ஒரு சதுரமாகும். மூன்றும் சம அளவுள்ளவை.



முஜிபுர் ரஹிமானை வரைய முயன்று பாருங்களேன் —தாணு



அடுத்த இதழில் யார்?

# தெரியுமா?

670. இரண்டாம் உலகப் போர் ஆரம்பமானபோது இங்கிலாந்தின் பிரதமராக இருந்தது யார்?

671. ஸ்காட்லாந்தின் மிகச் சிறிய மாகாணத்தின் பெயர் என்ன?

672. நம் உடலின் எந்தப் பாகத்தில் டெம்போரல் லோப் (Temporal Lobe) உள்ளது?

673. உஷ்ணத்தைக் கணக்கிட விஞ்ஞானிகள் பயன்படுத்தும் சொல்லின் பெயர் தெரியுமா?

674. பிரான்ஸ் தேசத்தின் மிகப் பெரிய நதியின் பெயர் என்ன?

675. காம்சட்கா (Kamchatka) எங்குள்ளது?

676. ஈராக்கின் தலைநகர் எது?

677. கார்னிவோர் (Carnivore) என்றால் என்ன?

678. பெட்ரோலியத்தின் கூட்டுப் பொருள்களுள் மிகக் கனமானது எது?

679. தாவரங்கள் தங்கள் வளர்ச்சிக்குத் தேவையான மாவுப் பண்டத்தையும் சர்க்கரையையும் எந்த இரண்டு பொருள்களின் சேர்க்கையினால் தயாரித்துக் கொள்ளுகின்றன?

680. கீழ்க்கண்டவர்கள் பொதுவான ஓர் அம்சத்தில் ஒற்றுமையுடையவர்கள். அது என்ன? நிக்கோலஸ் கோபர்நிகஸ், காலிலியோ காலிலி, எட்மண்ட் ஹாலே.

681. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தது (a) 1489 (b) 1492 (c) 1495 இந்த மூன்றில் எந்த ஆண்டு சரியானது?

682. லிபியா நாட்டின் மேல் எல்லையாக அமைந்துள்ளது ஒரு கடல். அதன் பெயர் என்ன?

683. எதியோப்பியாவின் தலைநகரம்?

684. ஆண்டஸ் மலையின் நீளம் தெரியுமா?

685. 'இன்ஃப்ரா ரெட் ரேஸ்' என்றால் என்ன?

686. பிரபோஸிடியா (Proboscidea) இனத்தைச் சேர்ந்த பிரபலமான மிருகம் எது?

687. ஸாரவாக் எந்தத் தீவில் உள்ளது?

688. எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடித்த பிரிட்டிஷ் கோஷ்டியின் தலைவருடைய பெயர் என்ன?

689. தண்ணீர் ஊற்றினால் நெருப்பு அணைந்து விடுகிறதே ஏன்?

690. ஹீலியத்தின் அணுக்களை விட ஹைட்ரஜனின் (ஜல வாயு) அணுக்கள் கனமானவையா? லேசானவையா?

691. போலிமார்ஃப்ஸ் (Polymorphs) என்றால் என்ன?

692. பாலரிக் தீவுகள் எங்குள்ளன?

693. பிரான்ஸ் நாட்டின் கிழக்கு எல்லையாக உள்ள ஐந்து நாடுகள் எவை?

694. கேப் டவுனுக்குப் பின்னாலுள்ள மிகப் பெரிய மலைப் பிரதேசத்தின் பெயர் என்ன?

695. முதல் மகாயுத்தம் முடிந்து சமாதான ஒப்பந்தம் கையெழுத்தானது எங்கு தெரியுமா? பிரான்ஸிலுள்ள ஒரு புகழ்பெற்ற மாளிகையில் — அதற்குக் கண்ணாடி மாளிகை என்று பெயர். அது எந்த ஊரில் உள்ளது தெரியுமா?

696. பிளன்ஹீம் என்ற இடத்தில் நடந்த போரில் நேச நாட்டுப் படைகளை நடத்திச் சென்றவர் யார்?

697. புகழ்பெற்ற மேரி அண்டாய்னெட்டின் கணவர் யார்?

698. புகழ் பெற்ற பல புத்தகங்களை மேரி ஆன் இவான் என்ற பெண் எழுதினாள் — ஓர் ஆணின் பெயரில். அந்தப் புகழ் பெற்ற பெயர் எது?

699. புகழ்பெற்ற நவீனமான 'யுத்தமும் சமாதானமும்' எழுதியவர் யார்?

## தெரியுமே!

670. சேம்பர்லின். 671. க்ளாக்மானன் ஷயர். 672. மூளைப்பகுதியில். 673. கலோரிகள். 674. லயர் நதி. 675. ரஷ்யாவில். 676. பாக்தாத். 677. மாமிசம் உண்ணும் பிராணிகள். 678. ஆஸ்ஃபால்ட் அல்லது பிட்டுமென். 679. இலைகளிலுள்ள க்ளோரோஃபில், சூரிய வெளிச்சம் ஆகியவைகளின் சேர்க்கையால். 680. மூவரும் வான ஆராய்ச்சியாளர். அதுவே ஒற்றுமை. 681. 1492ல். 682. மத்தியதரைக் கடல். 683. அடிஸ் அபாபா. 684. 5,000 மைல்கள். 685. உஷ்ணத்தை வெளியிடும் கண்ணுக்குத் தெரியாத கதிர்கள். 686. யானை - ஐந்து விரல்களும் துதிக்கையுமுடைய பிராணிகள் பிரபோஸிடியா வகையைச் சேர்ந்தவை. 687. போர்னியோ தீவில். 688. ஸர் ஜான் ஹண்ட். 689. நீர் ஊற்றுவதால் காற்றிலுள்ள பிராணவாயுவினால் தீயை விரைவில் அணுக முடிவதில்லை. தவிர தண்ணீர் தீயின் உஷ்ணத்தின் பெரும்பகுதியைத் தான் கிரகித்துக் கொண்டு அதன் எரிநிலைக்கான உஷ்ணத்தைக் குறைத்து விடுகிறது. ஆகவே பொருள்கள் அணைந்து போகின்றன. 690. இலேசானவை. 691. ரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்கள். 692. ஸ்பெயினின் மேற்கு கடற்கரைகளுக்கு அப்பால். 693. பெல்ஜியம், லக்ஸம்பர்க், ஜெர்மனி, ஸ்விட்ஸர்லாந்து, இத்தாலி. 694. டேபிள் மௌண்டன் (மேஜைமலை). 695. வெர்சயில்ஸில். 696. டியூக் ஆஃப் மார்ல்பரோ. 697. பிரான்ஸ் தேச அரசன் பதினாறாம் லூயி. 698. ஜார்ஜ் எலியட் என்னும் பெயரில். 699. லியோ டால்ஸ்டாய். ★


தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள...
நீயும் ஏன் திருப்பி அடிக்க வில்லை? நீ தற்காப்பு செய்து கொள்ளக் கற்க வேண்டும்.
அல்லது அடியை மணிக்கட்டால் தடுக்கலாம்.
முன்கையால் அல்லது தோளால் தாக்குதலைத் தாங்கிக்கொள்ளலாம்.
புரிந்ததா ராமு. இந்தச் சண்டையில் இது முதல் பாடம்— தற்காப்பு செய்துகொள்ளக் கற்பது.
அடடே, நேரமாகி விட்டது! படுக்கப் போ ராமு. பிரஷ் கொண்டு பற்களைத் துலக்கினாயா?
ஓ! தினந்தோறும் காலையில் துலக்குகிறேனே, அப்பா!
வா, நாமிருவரும் போர்ஹன்ஸ் பற்பசையால் பல் துலக்குவோம்.
சரி, அப்பா.
பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப் பட்ட பற்பசை.






'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்

# நீங்கள் செய்வது எதுவானாலும் சரி, பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் அதை சிறந்த முறையில் செய்ய உதவுகிறது.



அரைப்பங்கு சிலவில் இருபங்கு ஒளி!

பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் ஒரு 100 வாட் பல்பினைப்போல் இருபங்கு ஒளி தருகிறது. இருப்பினும் இதற்கு ஒரு 40 வாட் பல்புக்கான அளவு மின்சாரமே தேவைப்படுகிறது. பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்தி மின்சாரத்தை மிச்சப்படுத்துங்கள்.

தரம் மற்றும் உழைப்பு இவ்விஷயத்தில் பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்டே வாங்குவதற்குச் சிறந்ததாகும். கச்சிதமான பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் யூனிட் தரமான உறுப்புகளுடன் முன்கூட்டியே ஒயர் செய்யப்பட்டதாகும். பொருத்துவதற்கு எளிதானது. உபயோகிப்பதற்கு சிக்கனமானது. வேலைகளை சிறந்த முறையில் செய்ய இது உதவுகிறது—உங்கள் கடையிலும் சரி, வீட்டிலும் சரி.

## சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா? அதை முதலில் அளிப்பது பிலிப்ஸ்

# பிலிப்ஸ்

PHILIPS

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

REGISTERED NO. M. 9040